விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | ஆனி 04 ஞாயிற்றுக்கிழமை (18.06.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 181

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# வான் தாக்குதல் தொடர்ந்தால் பதில் தாக்குதலை புலிகள் நடத்துவர்

## அரசுக்கு அறிவித்ததாக தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

இராணுவத்தின் வான் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்க நேரிடும் என்று அரசுக்கு எமது தலைப்பீடம் எச்சரிக்கையை அனுப்பியுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

இந்த எச்சரிக்கையை அரசுக்குத் தெரிவிக்குமாறு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மற்றும் இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஆகியோரை விடுதலைப்புலிகள் கேட்டுக்கொண்டுள்ளனர் என்றும் தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

அது தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, இலங்கையில் உள்ள களநிலைமைகளை [illegible]ந்துகொள்ளாமல் ஹெப்பிட்டிக் கொல்லாவ தாக்குதலில் விடுதலைப்புலிகளைக்குற்றஞ்சாட்டி சில நாடுகள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

அத் தாக்குதலை விடுதலைப்புலிகளும் கண்டனம் செய்துள்ளனர். ஹெப்பிட்டிக் கொல்லாவ பயணிகளை விடுதலைப்புலிகள் தாக்கவில்லை என்றும் அக் கிளைமோர் தாக்குதலுக்கும் எமக்கும் தொடர்பில்லை என்றும் தெரிவித்துள்ளோம். இத்தகைய கொடூரத் தாக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் படகு விபத்தில்

### ஒருவர் உயிரிழப்பு இருவரை காணவில்லை

முகத்துவாரம் காக்கைதீவுப் கடற்பிரதேசத்தில் கடற்படைக்குச் சொந்தமான சிறிய படகு விபத்துக்குள்ளானதில் கடற்படை வீரர் ஒருவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வானத்தில் இன்று அரிய காட்சி

(சென்னை)

சனிக்கிரகமும் செவ்வாய்க்கிரகமும் ஒரு நேர்கோட்டில் மிக அருகில் சஞ்சரிக்கும் அரிய நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னர் மேற்கு வான் பரப்பில் இந்த அரிய காட்சியை கண்களால் காண முடியுமென பிர்லா கோளரங்கம் அறிவித்துள்ளது.

28 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1978ஆம் ஆண்டில் நடந்த இந்த அரிய காட்சியை இன்று காண தவறுபவர்கள் மீளவும் அதனைக் காண்பதற்கு 16 ஆண்டுகள் காத்திருக்கவேண்டும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (நி)

# பேசாலைக் கடற்பரப்பில் புலிகள் - கடற்படை மோதல்

## உயிரிழப்புக் குறித்து இரு தரப்பும் வேறுபட்ட அறிவிப்பு


(மன்னார்)

**மன்னார் பேசாலை கடற்பரப்பில் நேற்றுக் காலை 7 மணியளவில் கடற்புலிகளுக்கும் இலங்கை கடற்படையினருக்குமிடையே கடும் மோதல் இடம் பெற்றுள்ளது.**

இம் மோதல் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் ஊடகப்பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில்,

மன்னார் பேசாலை படைப்பிராந்தியத்தில் நேற்றுக்காலை 7மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படையின் மூன்று படகுகள் மூழ்கடிக்கப்பட்டதுடன் 12 கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

பேசாலை கடற்பரப்பில் கடற்புலிகள் போக்குவரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது கடற்புலி (10 ஆம் பக்கம் பார்க்க)



வவுனியா நைனாமடு பகுதியில் ஆழ ஊடுருவித் தாக்கும் படைச் சிப்பாய்ஒருவரை சுட்டுக்கொன்ற மக்கள்படை உறுப்பினர் ஜெயாவுக்கு சாள்ஸ் அன்ரனி சிறப் புப்படையணித் தளபதி நகுலன் நேற்று பரிசு வழங்கி கௌரவித்த காட்சியைப் படத்தில் காணலாம்.

# பேசாலை தேவாலயத்தில் ஆயுததாரிகள் வெறியாட்டம்

## 5 பொதுமக்கள் பலி; 40 பேர் காயம்

மன்னார் பேசாலை புனித வளனார் விக்டோரியா தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீது ஆயுதந்தாங்கிய குழுவொன்று கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தியுள்ளது.

இதில் வயோதிபப் பெண்மணி ஒருவர் உயிரிழந்ததுடன் 40 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மன்னார் பேசாலைக்கடலில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையே இடம் பெற்ற கடற்சமரையடுத்து கரையோரப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் குறித்த தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.

இந் நிலையில் முகங்களை துணியால் கட்டியபடி மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தேவாலயத்தின் யன்னல் வழியாக கைக்குண்டு ஒன்றை வீசினர். இதில் 65 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவர் உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து ஆயுததாரிகளால் நடாத்தப்பட்ட சரமாரியான துப்பாக்கிப்பிரயோகத்தில் 40 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை குறித்த ஆயுததாரிகளினால் கடற்றொழிலுக்குச் (10 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகள் ஏகப் பிரதிநிதிகள் அல்லர் நோர்வேயிடம் மங்கள சமரவீர தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கைத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக அங்கீகரிக்கக் கூடாது என்று நோர்வேயில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நோர்வே வெளிவிவகாரங்களுக்கான நாடாளுமன்ற நிலைக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் மங்கள சமரவீர இதைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை சரியானதே என்றும் அமைதிப் பேச்சுக்களுக்காக ஜனநாயகப் பன்முகத் தன்மையை உருவாக்க வேண்டுமென்றும் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக அங்கீகரிப்பதை நிராகரிக்க வேண்டும் என்றும் மங்கள சமரவீர கேட்டுக் கொண்டார்.

இக் கூட்டத்தில் பேசிய அமைச்சர் பேரியல் அஸ்ரப், வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள்16ஆண்டுகளாக அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர் என்றார்.

நோர்வேப் பிரதமர் ஜென்ஸ் ஸ்டோல்டெனபெர்க்கை மங்கள சமரவீர சந்தித்தார்.

இலங்கைக்கான பொருளாதார உதவிகளை நோர்வே தொடர்ந்து செய்யும் என்றும் நோர்வேப் பிரதமர் உறுதியளித்தார். நோர்வே போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு துறை அமைச்சர் லிவ் சிக்னெ நவர்ஸ்டெயையும் மங்கள சமரவீர சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்புக்களின் போது இலங்கை அமைச்சர்கள் பேரியல் அஸ்ரப், ரிஷாட் பதியுதீன் மற்றும் நோர்வேக்கான இலங்கையின் தூதுவர் அகமெட் ஜாவ்வாட் ஆகியோர் உடனிருந்தனர். (து)

# பொதுத் தேர்தல் நடத்துவது குறித்து அமைச்சர்களுடன் மஹிந்த ஆலோசனை

(கொழும்பு)

நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலை நடத்துவது குறித்து அமைச்சர்களுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை நடத்தியுள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான வாய்ப்பு மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமை ஆகியவை குறித்து அமைச்சர்களை மஹிந்த சந்தித்து உரையாடியுள்ளார்.

அமைச்சர்களை நான்கு குழுக்களாக கடந்த இரு நாட்களில் மஹிந்த சந்தித்துள்ளார். இதன் போது தற்போதைய நிலைமைகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி மஹிந்த விரிவாக ஆராய்ந்துள்ளதாக தெரிகிறது.

இந்த ஒவ்வொரு சந்திப்பிற்கு முன்னதாகவும் பாதுகாப்பு நிலவரம், சமாதான நடவடிக்கைகள், விலைவாசி உயர்வு, ஊழல்மோசடிகள், சிறிலங்கா சுதந்திரக் கட்சி என பேச்சுவார்த்தைக்கு எடுக்கப்படவுள்ள 10 தலைப்புக்கள் அடங்கிய குறிப்புகள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்த தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டே இந்த சந்திப்புகள் நடைபெற்றதாக மஹிந்தவின் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சாத்தியம் குறித்து அமைச்சர்களின் கருத்தையும் மஹிந்த கேட்டுள்ளார். அமைச்சர்களில் பெரும்பான்மையானோர் பொதுத் தேர்தலுக்கு எதிர்ப்பு தெரிவிக்காததுடன்,

அரசாங் கம் தொடங்கியுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்படையாதவகையில் அத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது அரசாங்கத்தை ஆதரித்த சிறுபான்மைக் கட்சிகளை அரசாங்கத்துடன் இணைத்துக் கொண்டு அமைச்சரவை திருத்தத்தைக் கொண்டு வருவது தொடர்பாகவும் மஹிந்தராஜபக்ஷ அமைச்சர்களின் கருத்தைக் கேட்டுள்ளார்.

விலைவாசி ஏற்றம் மற்றும் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கான தேவை மற்றும் அதற்கான நடவடிக்கை கள் த அரச நிறுவனங்களில் காணப்படும் ஊழல் மோசடிகளை ஆராய்ந்து அவற்றை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்த அரச வருவாயை அதிகரித்தல் த ஒஸ்லோ பேச்சு தோல்வியினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பாகவும் அமைச்சர் களுடன் மஹிந்த கருத்துக்களைப் பரிமாறியதாக கூறப்படுகிறது. (து)

## இராசிபலன்

18.06.2006
(ஆனி 4, ஞாயிற்றுக்கிழமை)
சப்தமி முற்பகல் 10.52 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 9.52 மணிவரை
இராகுகாலம் 4.23-5.53மணிவரை
சுபநேரம் 8.53-10.23 மணிவரை
சித்தாமிர்தம்

- **மேடம்:** தொழில் சிந்தை, பெருமையடைதல், தெய்வ சிந்தை, காரிய நன்மை.
- **இடபம்:** கடின உழைப்பு, சுபநிகழ்வு, பிறர் உதவ, உடல் நலம்.
- **மிதுனம்:** ஆன்றோர் ஆசி, வீண் பயம், கட்டுப்பாடு, உஷ்ண நிலை.
- **கடகம்:** மனக்கவலை, காரிய தடங்கல், போசன சுகம், உறவினர் சந்திப்பு.
- **சிங்கம்:** அபூர்வ சந்திப்பு, சயனசுகம், காரிய சித்தி, தெய்வசிந்தை.
- **கன்னி:** சுகவாழ்வு, திடீர் பயணம், சத்துரு ஜெயம், வாக்கு மேன்மை.
- **துலாம்:** சொத்துப் பிணக்கு, எடுத்த காரியம் தாமதமாகும், பணக்குறைவு, மரியாதைக் குறைவு,
- **விருச்சிகம்:** பயந்த சுபாவம், அற்பர் உறவு, கல்வியில ஆர்வம், காரியதாமதம்.
- **தனுசு:** இனிய அனுபவம், பொருள் சேர்க்கை, அன்னியர் சந்திப்பு, தொழில் சிந்தை.
- **மகரம்:** மதிப்புக்குறைவு, பொருள் விரயம், தொழில நன்மை, காரிய தாமதம்.
- **கும்பம்:** பெரியோர் ஆசி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், நல்லமுயற்சி.
- **மீனம்:** பிதா சிந்தை, பணவிரயம், முயற்சி தாமதம், சயனசுகக் குறைவு.

- வளவன்

# 65 இலட்சம் ரூபா கராம்பு இறக்குமதியில் தில்லுமுல்லு

(சென்னை)

இந்திய இலங்கை வர்த்தக ஒப்பந்தத்தை தவறாகப் பயன்படுத்தி ரூ 65 இலட்சம் ரூபா மதிப்புள்ள கராம்பு இறக்குமதி செய்த சென்னையைச் சேர்ந்த இறக்குமதியாளர் ஒருவரை மத்திய வருவாய் புலனாய்வுத் துறையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் உற்பத்தியாகும் வாசனைப் பொருட்களுக்கு சுங்க வரி சலுகை அளிக்கும் ஒப்பந்தம் இந்தியா இலங்கை இடையே செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை தவறாகப் பயன்படுத்தி இறக்குமதியில் ஈடுபட்ட சென்னையைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய வருவாய் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த ரகசியத் தகவலொன்றையடுத்து தூத்துக்குடி துறைமுகத்துக்கு வந்த 65 இலட்சம் ரூபா பெறுமதியான 22 தொன் கராம்பு மூடைகளை வருவாய் துறையினர் சோதனை செய்தனர். அப்போது அவை இலங்கை கராம்பு வகை அல்ல என்பது தெரியவந்தது.

இலங்கை சுங்கத் துறையினரிடம் இது குறித்து விசாரணை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இதனையடுத்து அங்கு நடத்தப்பட்ட விசாரணையில் இந்த கராம்பு மூடைகள் இந்தோனேசியத் துறைமுகத்திலிருந்து கப்பல் மூலம் இலங்கைவழியாக தூத்துக்குடி துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

சென்னையைச்சேர்ந்த இறக்குமதியாளர் இலங்கையில் உள்ள சிலரின் உதவியுடன் இறக்குமதி ஆவணங்களைமோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து ஆவணங்களை மாற்றியமைத்த இலங்கை முகாமையாளர் ஒருவரை சுங்கத் துறையினர் கைது செய்துள்ளனர். (து)

# மீனவர்கள் மீது கடற்படையினர் கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீனவர்கள் மீது கடற்படையினர் கெடுபிடி நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்குத் தயாரான மீனவர்களை கடந்த வியாழக்கிழமை இரவு கடற்படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர் என்றும்,

தமிழ் மக்கள் கொல்லப்பட்டால் துக்கம் கடைப்பிடிக்கும் மீனவர்கள், கெப்பிட்டிக் கொல்லாவ சம்பவத்திற்கு துக்கம் கடைப் பிடிக்க வேண்டும் என்று மிரட்டியே மீன் பிடிக்க அனுமதிக்காமல் கடற்படையினர் தடுத்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

குறிப்பாக குருநகரை அண்மித்த பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீதே கடற்படையினர் இத்தகைய கடும் கெடுபிடிகளை மேற்கொண்டதாகஅப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேபோல் யாழ். குடாநாட் டில் பெருமளவிலான மீனவர்கள் மீன் பிடித்தலை மேற்கொள்ள முடியாத அவல நிலையை எதிர்கொண்டதாகக் கூறப்படுகின்றது. (க)

# 'பேடன் பவல்' விருது பெற்றுச் சாதனை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மாவட்ட திரிசாரணனும், ஜனாதிபதி சாரணனுமான யோ.கேதீசன் என்பவருக்கு அதி உயர் விருதான பேடன் பவல் விருது கிடைத்துள்ளது. பெரும் சவால்களுக்கு மத்தியிலேயே இவ் விருதினை தமிழ்மொழியில் முதல் தடவையாகப் பெற்று இவர் சாதனை புரிந்துள்ளார்.



வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இவர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் முகிழ் நிலை ஆசிரியராக பயின்று வருகின்றார்.

1991ஆம் ஆண்டில் யா/வட்டு கார்த்திகேய வித்தியாலயத்தில் குருளைச் சாரணர் பிரிவு அங்குரார்ப்பணம் செய்யும்போது முதல் முறை விண்ணப்பித்து பின் 1993 ஆம் ஆண்டு யா/ வட்டு இந்துக் கல்லூரியில் சாரணர் பிரிவில் பயிற்சிபெற்று 1994 ஆம் ஆண்டு சின்னம் சூட்டப்பட்டவர்.

1996 ஆம் ஆண்டு முதல் கிளி/பூநகரி மகா வித்தியாலயத்தில் கல்வியைத் தொடரும்போது சாரணர் குழுவினை மீள ஆரம்பித்து கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் தரத்தில் புனரமைப்புச் செய்தும் பூநகரி கோட்ட மாணவர்களுக்கான சாரணர் பயிற்சிகளை வழங்கினார்.

1999ஆம் ஆண்டில் சிறந்த தலைவருக்கான கேடயத்தினை கோட்டக் கல்வி அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

2000 ஆம் ஆண்டில் இவருக்கு மட்டுமே அவ் ஆண்டு ஜனாதிபதி விருது கிடைத்தமை குறிப் பிடத்தக்கது.

இதனைப் பாராட்டி வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் நினைவுப் பதக்கங்களை 2001 ஆம்ஆண்டில் அணிவித்து கௌரவித்தனர்.

அன்றைய தினம் திரிசாரணராக தம்மை இணைத்துக் கொண்ட இவர் மீண்டும் 2002 ஆம் ஆண்டில் காங்கேசன்துறைக் கிளைச் சங்கத்துடன் இணைந்து யா/ வட்டு இந்துக் கல்லூரியில் சாரணர் ஆசிரியராக (சாரணர் தலைவர்) கடமை புரிந்து வருகின்றார்.

அத்துடன் மாவட்ட சாரணர் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். சர்வதேச தரத்திலான தலை மைத்துவப் பயிற்சியினையும் நிறைவு செய்து வருகின்ற இவர் வட-கிழக்கு மாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த ஐந்து வருடமாக இலங்கை ராணி/ ஜனாதிபதி சாரணர் கழகத்தின் ஆயுள்கால உறுப்பினராக இருந்து அந் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு வருகின்றார்.

நீண்டகாலமாக இவ் விருது எவருக்கும் வழங்கப்படாமல் தற் போது பல சவால்களுக்கு மத்தியில் பேடன் பவல் விருது தமிழ்மொழியில் இவருக்கு மட்டும் கிடைத்துள்ளது.

இவருக்கான சான்றிதழ் தேசிய சாரணர் நிகழ்வில் ஜனாதிபதியினால் வழங்கப்படுவது குறிப்பிடத் தக்கது. (க)

# அறநெறிப் பாடசாலைகளுக்கு விரைவில் சீருடைகள், இசைக் கருவிகள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள், 50 சுருதிப் பெட்டிகள், 50தாளங்கள், 400 ஒலிப்பேழைகள், 4ஆயிரம் பாடநூல்கள், 800 ஆசிரியர், மாணவர்களுக்கான குறிப்பேடுகள், 200 பஞ்சாங்கம் என்பனவற்றை யாழ். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் வழங்கியுள்ளது.

இவைகள் யாவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் வைத்து வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-133)

# சமுகமளிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி க.பொ.த (உ/த) பரீட்சைக்கான விடுமுறையின் பின் நாளை திங்கட்கிழமை கற்றல் கற்பித்தல் நடவடிக் கைக்காக மீள ஆரம்பிக்கப்படவுள்ளதால் சகல மாணவர்களும் ஆசிரியர்களும் அன்றைய் தினம் கல்லூரிக்கு சமுகமளிக்க வேண்டுமென கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (து)

# திருநாள் திருப்பலி


(சில்லாலை)

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30மணிக்கு, யாழ். ஆயர் வண பிதா தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (த-58)

# ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக
# தொடர் போராட்டங்களை நடாத்தி உணர்வுகளை வெளிப்படுத்துவோம்
## தொல் திருமாவளவன் அழைப்பு

(சென்னை)



ஈழத் தமிழர்களின் பாதுகாப்பை வலியு றுத்தி தமிழகமெங்கும் நேற்று முன்தினம் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர் தொல் திருமாவளவன் நிறைவுரையாற்றியபோது,

நாடுதழுவிய அளவில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டங்கள் இரண்டு முக்கிய குறிக் கோள்களைக் கொண்டு நடத்தப்படுகிறது. ஈழத்தமிழ் மக்கள் மீது சிங்கள இராணுவம் நடத்தி வரும் இராணுவ வெறியாட்டத்தை தடுத்து நிறுத்த வும் அங்குள்ள உண்மை நிலைமைகளை கண்டறிந்து வரவும் அனைத்துக் கட்சியைச் சார்ந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஈழத்திற்குச் சென்று வரவேண்டும் என்பதும். ஈழத்தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய பிரதமர் மற்றும் குடியரசுத் தலைவரை சந்திக்க அனுமதிக்க வேண்டும் என்பது இப்போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளாகும்.

இந்த நிலையில் தமிழக அரசு தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டும். இந்திய அரசின் நிலைப்பாடே தமிழக அரசின் நிலைப்பாடு என்று கருத்துச் சொல்லி இருப்பது குழப்பத்தை உருவாக்கியிருக்கிறது. சிங்கள அரசுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்திய அரசு ஆதரவு அளித்து வருகிறது. தமிழர்களுக்கு எதிராகச் செயல்பட்டு வருகிறது.

சிங்கள இனவாதிகளுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்பு கொடுக்கிறது. சிங்கள இராணுவத்திற்கு ராடர் வழங்கி வருகிறது. பலாலி விமானத் தளத்தை புதுப்பிக்க ஒப்புக்கொள்கிறது. இந்திய அரசின் இத்தகைய நிலைப்பாடுதான் தமிழக அரசின் நிலைப்பாடா?

தமிழக முதல்வர் தெளிவுபடுத்த வேண்டும் ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக்காக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வம் மற்றும் ரவிக்குமார் ஆகியோர் உரை யாற்றினார்கள்.

அகதிகள் பாதுகாப்பு தொடர்பாகவும் குரல் எழுப்பினர். தொடர்ந்து பேரவையில் எமது உறுப்பினர்கள் ஈழத்தமிழர்களுக்காக வாதாடி வருகின்றனர்.

சிங்கள இராணுவ வெறியாட்டத்தைக் கண்டித்து இந்திய அரசு சிங்கள சார்பு நடவடிக்கைகளைக் கைவிட்டு ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியும் எதிர்வரும் யூலை மாதம் 8ஆம் திகதி அன்று சென்னையில் விடுதலைச் சிறுத்தைகளின் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறும். ஈழத் தமிழர் களுக்கு ஆதரவாக இத்தகைய போராட்டங்களின் ஊடாக எமது உணர்வுகளை வெளிப்படுத்துவோம் அனைவரும் அணிதிரள்வோம் என்றார். (க)

## மினிபஸ் சேவை


ஊர்காவற்றுறை சிற்றூர்ச் சங்கம் தனது சாட்டிக்கான சேவையை அதிகரித்துள்ளது.

காலை 6.15 மணி தொடக்கம் அடிக்கடி சாட்டிக்கு சேவையாற்றி வருகின்றது. கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் 45 நிமிடத்துக் கொரு முறை இச்சேவை நடை பெறுவதாக சிற்றூர்திச் சங்கத் தலைவர் வி.திருஞானசம்பந்தர் தெரிவித்தார்.

சாட்டிக்கான மினிபஸ் கட்டணம் இரு பது ரூபாய் எனவும் தெரிவித்தார். பிரயாணத்தின் ஜான் தலைமைசாட்டிபுனித் சிந்தாத்திரை ஆலயம் இங்கு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க-72)

# யுத்த நிறுத்தத்தின் எதிர்காலம் அரசின் கையிலேயே உள்ளது
## என்கிறார் சீ.புலித்தேவன்

(கிளிநொச்சி)



இலங்கையில் யுத்த நிறுத்தத்தின் எதிர் காலமானது இலங்கைஅரசாங்கத்தைப் பொறுத்தது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சீ.புலித் தேவன் தெரிவித்துள் ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

அரசாங்கத்தால் தரையிலும் வானி லும் நடத்தப்பட்டிருக்கும் தாக்குதல் மீண்டும் யுத்தத்தை தொடங்கியுள்ளது என்பதையே காட்டுகிறது. அரச படைகள் ஒருமோசமான நிலையை உருவாக்கியுள்ளன.

அரசாங்க படைகள் எம்மீது போரைத் திணிக்க முயற்சிக்கின்றன. எதிர்கால யுத்த நிறுத்தமானது அரசாங்கத்தைப் பொறுத்தது. தற்போதைய தாக்குதல் தொடர்பாக எமது தளபதிகள் ஆராய்ந்து வருகின்றனர். அரச படைகளுக்கு எதிராக பதில் தாக்குதல் நடத்த அவர்கள் தயாராகி வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைகள் மற்றும் மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தப் பட்டிருக்கும் இந்த தாக்குதல்கள் குறித்த சேத விவரங்கள் இன்னமும் மதிப்பிடப்படவில்லை.

கிளிநொச்சியில் உள்ள எமது சமாதான செயலக அலுவலகத்திலிருந்து 2கிலோ மீற்றர் தொலைவில் விமானக் குண்டு வீச்சு நடத் தப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பகுதிகளில் நடத்தப்பட் டுள்ள தாக்குதல்களை போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினர் நேற்று முன் தினம் மதிப்பீடு செய்தனர் என்றார். (க)

அன்பு வாசகர்களே!

நயினாதீவு நாகபூசணி அம்பாளின் வரு - வலம் புரியில் இம்முறையும்

"நயினை நாகபூசணி அம்மன் பாமாலை"

வெளிவரும். நயினை அம்மனைத் துதி செய்யும் உங்கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி

நயினை நாகபூசணி அம்மன் பாமாலை
வலம்புரி
இல.03 இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# அல்லைப்பிட்டி பகுதிக்கு விரைவில் மின்சாரவசதி

(யாழ்ப்பாணம்)

கடந்த இருபது வருடகாலமாக மின்சார வசதிகள் இன்றி பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுத்துவரும் அல்லைப் பிட்டி மக்களின் வசதி கருதி அப்பகுதிக்கு உடனடியாக மின்சார வசதிகளை செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத் திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெயர்ந்த நிலை யில் யாழ் அடைக்கல மாத மற்றும் நாவந்துறை புனித நிக்கலஸ் ஆகிய தேவாலயங்களில் தங் கியிருந்த அல்லைப்பிட்டி மக்க ளைச் சந் தித்த போது அவர்களின் அடிப்படை மற்றும் அத்தி யா வசியத்தேவைகளைப் பூர்த்தி செய்து தரு வதாகத் தான், அம்மக்களுக்கு அளித்த வாக் குறுதிகளுக்கு அமைவாக, தற்போது அல் லைப்பிட்டி பகுதிக்கு மின்சாரம் வழங்குவ தற்கான அனைத்துப் பணிகளும் மேற் கொள்ளப்பட்டுவருவதாக நேற்று முன்தினம் பொதுமக்களது பிரச்சினை களைத் தீர்த்து வைக்கும் பொருட்டு யாழ். அலு வலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப் பின் போது கூடி யிருந்த மக்கள் மத்தியில் உரை யாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

மீளக் குடியமர்ந்துள்ள அல்லைப்பிட்டி மக் களுக்கான இழப்பீடுகள் யாவும் விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் அப்பகுதியில் மருத்துவ வசதிகளைப் பெற மருத்துவமனைகள் இல்லாத நிலையில் அதற் கான ஒழுங்குகளை மேற் கொள்வதற்கான நட வடிக்கைகளும், அப் பகுதிக்கு போக் குவர த்து வசதிகளைஏற்படுத் திக்கொடுக்கும் நடவடிக்கை களும் தற்போது மேற்கொள் ளப்பட்டு வருவதா கவும் கூறினார்.

அல்லைப்பிட்டி மக்கள் தத்தமது வீடுக ளுக்கு மின்சார இணைப்புகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கான படிவங்கள் இன்னும் ஓரிருதினங்களில் விநியோகிக்கப் படவுள்ளதா கவும் இவ் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து அம்மக்கள் தங்களது வீடுகளுக் கான மின் சார வசதிகளைப்பெற்றுக்கொள்ள இயலு மென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார். (க)

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுச் சபையின் அனுசரணையுடன் நடைபெறும் யாழ். பல்கலைக்கழக அணிக்கும் பற்றீ சியன் விளையாட்டுக்கழக அணிகளுக் கும் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள் ளது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீட பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் கலந்து கொள்வார். (து-133)

# கொத்மலை நீர்த்தேக்கப் பகுதிகளில் வெடிப்புகள் ஏற்படும் அறிகுறி!!
## மண்சரிவு அபாயமுள்ளதாக புவியியல் நிபுணர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொத்மலை நீர்த்தேக்கம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் அமைந்துள்ள நான்கு கிராமப் பகுதிகளில் வெடிப்புக்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படு வதாகவும் இதனால் மண்சரிவு ஏற்படக் கூடிய சாத்தியக்கூறு இருப்பதாகவும் தேசிய கட்டட மற்றும் ஆய்வு அமைப்பின் மண்சரிவு பிரி வின் புவியில் நிபுணரான சமன்த்த போகாப் பிட்டிய தெரிவித்துள்ளார்.

கொத்மலை நீர்த்தேக்கத்தின் அண்டிய பகுதிகளில் அமைந்துள்ள வடத்தர மாவெல உட்பட்ட நான்கு கிராமங்களிலிருந்து கொத் மலை நீர்த்தேக்க பிரதேசத்திற்கு வரும் நிலப் பகுதியில் வெடிப்புகள் ஏற்பட்டு வரும் அறி குறிகள் காணப்படுவதாகவும் இது பல வரு டங்களாகஇருந்து வரும் அறி குறியெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அடையாளமாக இப் பிரதேசத் தில் சில வீடுகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டி ருக்கின்றன என்று குறிப்பிட்ட அவர் நீர்த் தேக்க சுற்றுப்புற அவதான நிலைமை தொடர்பாக விசேட ஆய்வுகளை நடத்த திடீர் நிவாரண முகாமைத்துவ குழுவொன்று அமைக் கப்படவுள்ளது.

இந்நில வெடிப்பானது மண்சரிவு அபா யம் ஏற்படுவதற்கான அறிகுறியாக இருப்ப தோடு இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கூறினார். (க)

# நடமாடும் மருத்துவ ஆய்வுகூட டசேவை

(யாழ்ப்பாணம்)

ஆய்வுகூட வசதி மற்றும் மருத்துவகூட தொழில் நுட்பவியலாளர்கள் இல்லாத வைத் திய சாலைகளின் வசதி கருதி யாழ்ப்பாண பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் பணிமனையின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவ ஆய் வுகூடம் நாளை திங்கட்கிழமை முதல் சேவையில் ஈடுபடவுள்ளது.


இச்சேவை நாளை காலை 8மணிக்கு அச்சுவேலியில் உள்ள சுற்றயல் கூறுவைத் திய சாலை யில் சம்பிர தாயரீதியாக ஆரம்பித் துவைக்கப்படவுள்ளது.

தொடர்ந்து நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை சாவ்கச்சேரி மாவட்ட வைத்தியசாலை யிலும் மறு நாள் புதன்கிழமை வேலணை கிரா மிய வைத்தியசாலையிலும், வியாழக்கிழமை கோப்பாய் சுற்றயல் கூறுவைத்தியசாலை யிலும், வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை யிலும்,

சனிக்கிழமை (மீண்டும்) சாவகச்சேரி மாவட்டவைத்திய சாலையிலும் நடமாடும் மருத் துவ ஆய்வு கூடம் சேவை யில் ஈடு படவுள்ளது.

இதேவேளை, மத்திய சுகாதார அமைச் சால் வழங்கப்பட்டுள்ள இந் நடமாடும் ஆய் வுக்கூடத்தில் சேவை புரிவதற்கு வைத்திய தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் சாவ கச்சேரிமாவட்ட வைத்தியசாலையிலிருந்து நிய மிக்கப்பட்டுள்ளார். (க)


## யாழ் .பல்கலைக்கழக அணி



அமர்ந்திருப்போர் (இடமிருந்துவலம்) ஜி.டி.மதியழகன் (பயிற்றுநர்), ரி.கௌரிபா கன், ஜீ அருள்ராஜ்(தலைவர்), ஏ.ராஜிவன் (உபதலைவர்), ரி. சர்வானந்த், கே. பந்து லன், கே. கணேசானந்தன் (முகாமை யாளர்),

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) ஜீ.உத யனன், எஸ்.சிறிபிரசன்னா, ஏ.ஜெயந்தன், பி. ரவிசங்கர், வி.மணிவண்ணன், எஸ்.கோபிநாத், ஜே.சண்யோபன், ஏ.நிசாந் தன், என்.செந்தூரன்.

## பற்றீசியன் அணி



அமர்ந்திருப்போர் (இடமிருந்துவலமாக) எஸ்.பி. இரத்தினராஜா (முகாமையாளர்), பி.பாத்தீபன், ரி.யூட் அன்ரனிஸ் (தலை வர்), வண பிதா டாக்டர் ஜஸ்ரின் பி. ஞானப்பிர காசம், ரி.ஜெ[illegible]முகுந்தன், ஜீ.ஆர். தேவரா ஜன் (உப தலைவர்), ஏ.எஸ்.நிசாந்தன் பயிற் றுநர்)

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)

எஸ்.ஜினன்ராஜ், ஆர். வினோதன், ஏ. ஆர்.சர்ச்சில், ஜி. செல்லின் லோயிட், ஏ.ஜெய ந்திரன், வி.விதுபாலா, ஏ.மரின் குமார்.

## இன்று ஒரு தகவல்

# நாயின் நல்ல பண்புகள்

"உங்களுக்கு கடவுள் பக்தி உண்டா?" என்று கேட்டார் ஒரு வர். உண்டு என்று சொன்னார் இன்னொருவர். அப்படி யென்றால் நாயிடம் உள்ள நல்ல பண்புகள் உங்களி டம் இருக்கவேண்டும் என்றார் அவர். இவருக்கு அதிர்ச் சியாகிவிட்டது ஒன்றும் புரியவில்லை என்ன திடீரென்று இப்படிச் சொல்லிவிட்டீர்களே என்றார். நான் ஒன்றும் கிண் டலுக்காக அப்படிச் சொல்லவில்லை வலிமார்களின் வர லாறுபடித்தேன் அதில் ஹஸன் பஸரி சொல்கிறார்.

நாயிடம் 10 நல்ல பண்புகள் உண்டு இறைநம்பிக்கை உள்ளவர்களிடமும் இந்த பத்து நல்ல பண்புகள் இருக்க வேண்டியது அவசியம் என்கிறார். சரி அப்படியென்ன பத்து நல்ல பண்புகள் உண்டு நாயிடம்.

முதல் பண்பு அது பசித்திருக்கும். பசித்திருத்தல் என்பது நல்லவர்களின் நற்பண்பு. இரண்டாவது அது தங்கு வதற்கு குறிப்பிட்ட இடம் கிடையாது இந்தப்பண்பு இறை ஆதரவு பெற்றவர்களின் அடையாளம். மூன்றாவது அது இரவில் கொஞ்ச நேரம் தான் உறங்கும் இது இறை காதலர்களின் நற்பண்பு. நான்காவது அது செத்தால் அனந்தரம் கொள்ளும் பொருள் அதனிடம் கிடையாது இது தவிகளின் அடையாளம்.

ஐந்தாவது எஜமான் எத்தனை முறை அடித்து விரட்டினாலும் அவனை விட்டுவிலகாது உண்மை ஆன்மிக மாணவர்களின் வழக்கம் இது. ஆறாவது அது பூமியில் தாழ்ந்த இடத்தையே பொருத்திக்கொள்ளும் தாழ்மையுடையோரின் நற்பண்பு இது. ஏழாவது நாய் அதன் இடத்தை வேறொன்று ஆக்கிரமித்துக்கொண்டால் அது வேறு ஒரு இடத்தில் போய் படுத்துக்கொள்ளும் இறை நாட்டமுள்ளோரின் நற்பண்பு இது.

எட்டாவது எத்தனை முறைவிரட்டினாலும் அதன் முன்னால் ஒரு ரொட்டித்துண்டைக் காட்டினால் அது நட்பால் வருமே தவிர வினயத்துடன் வராது இது பக்திமான்களின் நற்பணபு. ஒன்பதாவது உணவைக் கண்டால் அது தொலைவில் அமர்ந்து வழிபார்த்துக்கெண்டிருக்கும் இது ஏழைகளின் நற்பண்பு. பத்தாவது அது ஒரு இடத்தை விட்டுககிளம்பிவிட்டால் மறுபடியும் அந்த இடத்தை திரும்பப்பார்க்காது இது விசார முடையவர்களின் குணம்.

நாய்களிடமிருந்தும் நல்லவர்கள் கற்றுக்கொள்ளக் கூடிய நற்பண்புகள் இருக்கிறதா இல்லையா? ஆனால் நாம் என்ன செய்கிறோம் அடுத்தவர்களைத்திட்டுவதற்குத தான் நாய் என்ற வார்த்தையை உபயோகப்படுத்திக் கொள்கிறோம். அவனிடம் பேச்சுக்கொடுக்காதே நாய் மாதிரி வள்ளென்று விழுவான் என்று சொல்வது உண்டு.

ஒருவர் விதம் விதமாக நாய்க்குட்டிகள் வளர்த்துக் கொண்டிருந்தார் பல்வேறு இனங்கள் வெவ்வேறு ஜாதிகள் வெளிநாட்டு வகைகளெல்லாம் கொண்டுவந்து வைத்து விறபனை செய்து கொண்டிருந்தார். எல்லாவற்றையும் வீட்டுக்குள்ளேயே வைத்து வளர்த்துக்கொண்டிருந்தார். அவரிடம் ஒரு நாய்க்குட்டியை விலைக்கு வாங்கப் போனார் ஒருவர்.

சார் ஒரு நல்ல ஜாதிநாய்க்குட்டி வேண்டும் எஜமான் விசுவாசம் அதிகமாக இருக்கவேண்டும் எப்போதும் என்னை விட்டுபிரியவே கூடாது அப்படிப்பட்ட குணமுள்ள ஒரு குட்டியை நீங்களே பார்த்துத்தேர்ந்தெடுத்துக்கொடுங்கள் என்றார்.

அப்படியென்றால் அதோ உங்களுக்கு வலரு பக்கம் கட்டிப்போட்டிருக்கிறேனே கறுப்புக்குட்டி அதைஎடுத்துக் கொண்டுபோங்கள் என்றார் அவர். இதற்கு எஜமான் விசுவாசம் அதிகமா? என்று கேட்டார். இவர் ஆமாம் வளர்ப்பவர்களிடம் மிகவும் பிரியமாகஇருக்கும் பிரியவே பிரியாது என்றார் அவர்.

அது எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்? என்றார் இவர். இதுவரை இந்த நாய்க்குட்டியை ஏழு பேரிடம் விற்றிருக்கிறேன் அழைத்துக்கொண்டுபோன அடுத்த நாளே இங்கே ஓடிவந்துவிடும் என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பிரித் ஓதிக்கொண்டு விகாரைக்குள் குண்டுகள் விழும்வரை காத்திருந்தால் நாடுபிளவுபடுமாம்

## இப்படிக்கூறுகிறது தேசிய பிக்கு முன்னணி

(கொழும்பு)

பயங்கரவாதிகளான புலிகளை அவர்களின் வழியில் சென்றே தோற்கடித்து நாட்டைக்காப் பாற்ற வேண்டும் அதற்கு இன, மத, மொழி, பேதங்களை மறந்து அனை வரும் ஒன்றிணைய வேண்டும்.

சமாதானத்துக்காக போதி பூஜை செய்து பிரித் ஓதிக் கொண்டு பௌத்த விகாரைக்குள் குண்டு விழும்வரை காத்திருந்தால் தாய் நாட்டை துண்டு துண்டாகத்தான் பார்க்க முடியும் இவ்வாறு தேசியபிக்கு முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் தெரி வித்தார்.

கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நேற்று முன்தி னம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, புலிகள் செல்லும் பாதையில் நாமும் சென்று பயங்கர வாதத்தை தோற்கடித்து நாட்டை காப்பாற்றுவோம். சிங்களவர்கள் பொறுமையான வர்கள் அந்தபொறுமைக்கும் ஓர் எல்லையுண்டுஎன் பதை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டும். (கு)

# தேசிய மட்ட மின்சார சேமிப்புத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றம் காரணமாக மின்னுற்பத் திக்கு அதிக செலவேற்படுவதால் தேசிய மட்ட மின் சார சேமிப்புத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பேரில் நடை முறைப் படுத்தப்பட வுள்ள இத்தேசிய வேலைத்திட்டம் தொடர்பாக பொது மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

மின்சக்தி எரிசக்தி அமைச்சில் அண்மையில் நடை பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர் எரிபொருள் விலை 100 டொலர் வரை அதிகரிக்கலாம் என எதிர் பார்க்கப்படுவதால் அதற்கு இப்போதிருந்தே முகங் கொடுக் கு முகமாக இத்தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வேலைத் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக மின்னுற் பத்திக்கான செலவு பெருமளவு அதிகரித்துள்ளது. இதுவரை ஒரு அலகுக்கான மின்னுற்பத்திச் செலவு 12 ரூபா 50 சதமாக இருந்தது. எரிபொருள் விலையேற்றம் காரணமாக இப்போது இது 15 ரூபாவாக அதிகரித்துள்ளது.

எனினும் அரசாங்கம் ஒரு அலகு மின்சார கட்டணமாக எட்டு ரூபாவையே அறவிட்டு வருகிறது. இதனை ஈடுசெய்ய வேண்டுமாயின் மின்கட்டணங்களை 50 வீதத்தால் அதிகரிக்க வேண்டும்.

2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கு பின் மின் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை அப்போது டீசல் விலை 15 ரூபா 40 சதமாக இருந்தது. இப்போது 63-67 ரூபா வாக டீசல் விலை உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் பாரிய கட்டண அதிகரிப்புக்கு சென்று மக்களுக்குச் சுமையை ஏற்படுத்த அரசாங்கம் விரும்ப வில்லை .எனவே மின்சாரத்தை சிக்கனமாக பாவிக்கும்படி மக்களை அறிவூட்டி மின்சார செலவுகளை குறைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்துக்கு பொதுமக்களும் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். இவைதவிர மின்சார சேமிப்பு திட்டத்தின் கீழ் சகல அரச நிறுவனங்களும் கூட்டுத்தாபனங்களும் அமைச் சுக்களும் அதன் கீழுள்ள ஏனைய தாபனங்களும் 20 வீதத்தால் மின் பாவனையை குறைக்க வேண்டும்.

இதற்கான சுற்றுநிருபம் விரைவில் குறித்த சகல அரச நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்கள் இதற்கு பொறுப்பாக இருப்பார்கள் . மின்சார சேமிப்புக்கான நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டு முகாமையாள ரொருவரும் நியமிக்கப்படவுள்ளார். இதன் கீழ் அமைச்சுக்களின் கீழுள்ள சகல நிறுவ னங் களும் மின்சார சேமிப்புக்கான திட்டத்தினை நடை முறைப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் .

குளிரூட்டிகளை பாவிப்பதை நிறுத்தி கொள்ள வேண்டும். மிக அவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் குளிரூட்டிகள் பயன்படுத்தப்படவேண்டும்.

மின் விசிறிகளின் பாவனையையும் முடிந்தளவு குறைக்கவேண்டும் மின் குமிழ்களின் பாவனையை முடிந்தளவு குறைத்தால் உதவியாக இருக்கும்.

தனியார் துறையினது உதவியையும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சகல தனியார் நிறுவனங்களுக்கும் இதுபற்றி அறிவிக்கப்படும். ஹோட்டல்கள், தொழிற்சாலைகள், ஏனைய பாரிய தனியார் நிறுவனங்கள் பாரிய ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தவேண்டும். பிற்பகல் 6.00மணிக்கும் 9 மணிக்குமிடையில் இவற்றினைப் பயன்படுத்துவதன் மூலம் பெருமளவு மின் சாரத்தினை சேமிக்க முடியும்.

அத்தோடு இரவு 10 மணிக்குப்பின் விளம்பரப் பலகைகளுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் மின் குமிழ்களை அணைத்து விடுவதுடன் கவர்ச்சிகரமான மின் அலங்காரங்களைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

இதேசமயம் அரசின் மின் சேமிப்பு திட்டத்துக்கு உதவும் மின் பாவனையாளர்களுக்கு மின் கட்டணத்தில் கழிவினை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களை விட மின் கட்டண பட்டியல்களில் குறைந்தளவு மின்னைப்பாவிக்கும் பாவனையாளர்களுக்கு இக்கழிவு சலுகை வழங்கப்படவுள்ளது.

அத்தோடு மின்சார சேமிப்புக்கான சி.எவ்.எல். மின் குமிழ்களைப் பயன்படுத்துமாறும் இதன் பொருட்டு தரம் வாய்ந்த மின் குமிழ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர் தரம் குறைந்த சி.எவ்.எல். மின் குமிழ்களின் இறக்குமதி தடை செய்யப்படும் என்றும் தெரிவித்தார். (க-7)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவத்தினரால் ஆபத்து

## க.கா.குழுவுக்கு மாணவர் ஒன்றியம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவத்தினரால் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு மாணவர் ஒன்றியத்தால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த சில நாட்களாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு வருகின்றனர். கடந்த 12ஆம் திகதி யாழ். கல்வியங்காட்டு சந்தியில் வைத்து யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதியாண்டு மாணவன் ஒருவர் படைகளால் கடுமையாகத்தாக்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து கடந்த 13ஆம் திகதி கந்தர்மடம் பலாலி வீதியில் இராணுவத்தினர் மீது நடாத்தபட்ட தாக்குதலைத்தொடர்ந்து படையினர் அருகில் உள்ளவீடுகளுக்குச் சென்று சோதனையிட்டனர். அன்றைய தினம் பலாலி வீதியில் பல்கலைக் கழக மாணவன் தங்கி நின்று கல்வி கற்கும் வீட்டிற்கு சென்ற நான்கு படையினர் அங்கு தங்கி நின்று கல்வி கற்றுவரும் பல்கலைக்கழக விஞ்ஞானபீட 1ஆம் வருட மாணவன் ஒருவரை கடுமையாகத் தாக்கிவிட்டு சென்றனர். பின்னர் வீதிக்கு அழைத்துச் சென்று அவரை சுட்டுவிட்டு அவரே அந்த தாக்குதலை நடாத்தினார் என்று பழி போட முனைந்துள்ளனர்.

எனவே இவ்வாறான சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் வேண்டுகின்றோம் என அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அக் கடிதத்தின் பிரதி சர்வதேச மன்னிப்புச் சபை, யாழ். அரசாங்க அதிபர், இலங்கை மனித உரிமை ஆணைக் குழு, வடக்கு-கிழக்கு மனித உரிமை செயலகம், ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழகம் ஆகியோருக் கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அகதிகள் முகாமில் தமிழக அமைச்சர்கள்

தமிழ் நாட்டில் உள்ள மண்டபம் அகதி கள் முகாமில் தமிழக அமைச்சர்கள் குழு நேற்று முன்திணம் ஆய்வு செய்தனர். அகதிகள் நிலைமகள் குறித்த அறிக் கையை தமிழக அரசாங்கத்துக்கு அளிப்ப தற்காக அமைச்சர்கள் சுப. தங்கவேலன் பெரியகருப்பன் ஆகியோர் அடங்கிய குழுவை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி நிய மித்திருந்தார்.

இதையடுத்து அமைச்சர்கள் இருவரும் மண்டபம் அகதிகள் முகாமுக்குச் சென்று ஈழத் தமிழ் அகதிகளிடம் குறைகளைக் கேட்டறிந் தனர். மேலும் அகதிகள் வரக் கூடும் என்பதால் மண்டபம் அகதிகள் முகாமில் கூடுதல் வசதி கள் செய்யவும் அமைச்சர்கள் ஏற்பாடு செய்துள் ளனர். (கு)

# கிளிநொச்சித் தாக்குதலுக்கு மன்னிப்புச் சபை கண்டனம்

(கொழும்பு)

தமிழர் தாயகப்பகுதியில் படையினரால் நடத்தப்படும் வான் தாக்குதல்களை சர்வதேச மன்னிப்புச்சபை வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பில் அறிக் கை ஒன்றினை வெளியிட்டிருக்கும் மன்னிப்புச் சபை ஹெப்பிட்டிகொல்லாவ பகுதியில் நடத்தப்பட்ட கிளை மோர் தாக்குதலுக்கு பழிவாங்கும் நோக்கோடு அரசாங்கத்தினால் நடத்தப் படும் நடவடிக்கைகள் பொது மக்களுக்கு ஆபத்தாக அமையலாம் என எச்சரித் துள்ளது.

கண்மூடித்தனமாக பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக அமையும் தாக்குதல்கள் அனைத்துலக மனித நேய சட்டங்களுக்கு முரணானது என சர்வ தேச மன்னிப்புச்சபை குறிப்பிட் டுள்ளது. கடந்த மாதம் சரத்பொன்சேகா மீதான தாக் குதலின் பின்னர் அரசாங்கம் தொடுத்துள்ள வான் வெளித் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டு பல ஆயிரக்கணக்கா னோர் இடப்பெயர்வுக்கு உள்ளாகியமையையும் சர்வ தேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் நீண்ட நாட்களாக நடைபெறும் தீவிர யுத்தம் எந்த நேரமும் முழு அளவிலான யுத்தமாக வெடித்து மனித உரிமை மீறல்கள் அதிகரிப்பதற்கு வழிகோலலாம் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை கவலை வெளியிட் டுள்ளது. (ச-5)




## உதைபந்தாட்ட ரசிகர்களை ஆர்ஜென்டினா கோல் மழையில் மூழ்கடித்தது

உதைபந்தாட்ட ரசிகர்களை ஆர்ஜென்டினா கோல் மழையில் மூழ்கடித்தது. அருமையான ஆட்டத்தின் மூலம் 6கோல் போட்டுபிரமாண்ட வெற்றிபெற்றது. செர்பியா அன்ட் மான்டினிக்ரோவின் நிலைதான் ரொம்ப பரிதாபம். எதிர்த்து ஒரு கோல் கூட அடிக்கமுடியாமல் தொடரில் இருந்து வெளியேறியது. ஜேர்மனியில் 18ஆவது உலக கோப்பை உதைபந்தாட்ட தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் ஜெல்சன் கிர்சனில் நடந்த 'சி' பிரிவு லீக் போட்டியில் இரண்டு முறை சம்பியன் ஆர்ஜென்டினா அணி செர்பியா அண்ட் மான்டினிக்ரோவை சந்தித்தது. அசத்தலான பாஸ் மூலம் ஆட்டத்தை ஆர்ஜென்டினா பிரமாதமாக ஆரம்பித்தது.

முதல் நிமிடத்தில் இந்த அணிக்கு கோர்னர் உதை கிடைத்தது. இந்த வாய்ப்பு வீணான போதும் ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தில் இடதுபுறத்தில் இருந்து ஜுவான் பாப்லோ சோரின் கொடுத்த பாசை பெற்ற சேவியர் சவியாலோ அதை மேக்சி ரோட்ரிக்சுக்கு பாஸ் செய்தார். அதை அப்படியே உற்சாகத்துடன் கோல் போஸ்டுக்குள் ரோட்ரிக்ஸ் நுழைக்க, ஆர்ஜென்டினா முதல் கோல் அடித்தது.





ஆட்டத்தின் 31ஆவது நிமிடத்தில் இன்னொரு தாக்குதல். இம்முறை சேவியர் செவியாலோ பந்தை பாஸ் செய்ய, அதைப் பெற்ற ஜுவான் ரோமன் ரிக்கில்ம், எஸ்டிபன் காம்பியாசோவுக்கு கொடுத்தார். கிட்டத்தட்ட 24 பாசுக்கு பிறகு காம்பியோசோ 12 மீற்றர் தூரத்தில் இருந்து கோல் அடிக்க ஆர்ஜென்டினா 2-0 என்ற முன்னிலை பெற்றது.

41ஆவது நிமிடத்தில் சேவியர் செவியாலோ கொடுத்த பாசை பெற்ற மேக்சி ரோட்ரிக்ஸ் தனது இரண்டாவது கோலை அடிக்க ஆர்ஜென்டினா முதல் பாதியில் 3-0 என்ற மகத்தான முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியிலும் ஆர்ஜென்டினா கோல் மழை பொழிந்தது. செர்பிய அணிக்கு 64ஆவது நிமிடத்தில் பெரும் பின்னடைவு. ஆர்ஜென்டினாவின் சேவியர் மாஸ்செரோனவை முரட்டுத்தனமாக தடுத்த மடேஜா கேஸ்மென் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். ஏற்கனவே திணறிய செர்பியா 10 பேராக குறைய ஆர்ஜென்டினா அடுத்தடுத்து கோல் அடித்து அசத்தியது. ஆட்டத்தின் 78ஆவது நிமிடத்தில் கிடைத்த பிறி-கிக் வாய்ப்பில் ஜுவான் ரோமன் ரிகில்ம் அடிக்க அதைப் பெற்ற லியோனல்மெசி, ஹர்னான் கிரஸ்போவுக்கு தட்டிக் கொடுத்தார். அதை கிரஸ்போ அருமையான கோலாக மாற்ற முன்னிலை 4-0 ஆனது.

84ஆவது நிமிடத்தில் கார்லஸ் டெவேஸ் தனி ஆளாக சென்று ஆர்ஜென்டினாவின் 5ஆவது கோலை அடித்தார். 88ஆவது நிமிடத்தில் இளம் லயோனல் மெசி ஒரு கோல் அடிக்க ஆர்ஜென்டினா அணி 6-0 என்ற கோல் கணக்கில் வென்றது. இதுவே இத்தொடரில் பிரமாண்ட வெற்றியாக அமைந்தது. இதன்மூலம் இரண்டாம் சுற்றுக்கு ஆர்ஜென்டினா முன்னேறுவது உறுதியானது. தொடர்ந்து இரண்டு தோல்விகளை சந்தித்த செர்பியா தொடரில் இருந்து வெளியேறுகிறது.

ஆர்ஜென்டினா வீரர்கள் பந்தை பாஸ் செய்த விதம் மிகவும் அருமை. இன்னும் சொல்லப்போனால் அவர்களுக்குள்ளே தான் விளையாடிக்கொண்டார்கள். அணியின் இரண்டாவது கோலை காம்பியோசா 24 பாஸ்களுக்கு பிறகு அடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்டத்தில் மொத்தம் 588 முறை ஆர்ஜென்டினா பந்தை பாஸ் செய்தது. உதைபந்தாட்டத்தில் 300 க்கும் அதிகமாக பாஸ் செய்தாலே சிறந்த ஆட்டமாகக் கருதப்படும். நேற்று முன்தினம் ஆர்ஜென்டினா அணி செர்பியாவை 6-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இது உலக கோப்பை வரலாற்றில் 10ஆவது பிரமாண்ட வெற்றியாக அமைந்தது.

நேற்று முன்தினம் அரங்கில் இருந்து ஆட்டத்தை உற்சாகமாக கண்டுகளித்தார் ஜாம்பவான் மாரடோனா, மெசி வந்த போது கைதட்டி ஆரவாரம் செய்தார். ஆர்ஜென்டினா அணியின் 12ஆவது வீரர் என்று வர்ணிக்கப்படும் மாரடோனா உரிய ஆலோசனை வழங்கி வருகிறார். இவரது வழிகாட்டுதலில் ஆர்ஜென்டினா மீண்டும் கோப்பையை வென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தரமான ரீ.வி ஒளிபரப்பை உறுதி செய்யும் வகையில் நேற்று முன்தினம் போட்டியின் போது கெல்சன்கிர்சன் அரங்கின் மேற்கூரை மூடப்பட்டு இருந்தது.

அமிர்தன்

## ரோபோக்களின் உதைபந்தாட்டம்

உலக கோப்பை போட்டியை மிஞ்சும் வகையில் ரோபோக்கள் விளையாடும் உதைபந்தாட்டப் போட்டி ஜேர்மனியில் நடந்துவருகிறது.

இதில் மனிதர்களைப் போல் உருவாக்கப்பட்ட ரோபோக்கள் லாவகமாக பந்தை பாஸ் செய்து கோல் அடித்து பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும் விதமாக இருந்தது. இதில் 36 நாடுகளைச் சேர்ந்த 440 ரோபோ அணிகள் கலந்துகொண்டுள்ளன.

## ரொனோல்டோவுக்கு மருத்துவ பரிசோதனை

பிரேசில் அணியின் கதாநாயக ஆட்டக்காரர் ரொனோல்டோவுக்கு மயக்கம் ஏற்படுவதாக தெரிவித்தமையால் கடந்த புதன்கிழமை மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.


கடந்த செவ்வாய்க்கிழமை குரோஷியாவுடன் நடைபெற்ற போட்டிக்கு பின் அவர் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டார்.


'நான் மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்தேன். முழுத் திருப்தியுடன் திரும்பியுள்ளேன். கவலைப்படும்படியாக ஒன்றுமில்லை' என்று ரொனோல்டோ தெரிவித்துள்ளார். ரொனோல்டோ தொடர்ந்து விளையாடுவார் என்று பயிற்சியாளர் கார்லோஸ் அல்பர்டோ தெரிவித்துள்ளார்.

## ஐவரிகோஸ்டை வென்ற நெதர்லாந்து இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியது

நெதர்லாந்து அணி ஐவரிகோஸ்டை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியது. ஆபிரிக்காவின் ஐவரிகோஸ்ட் தொடரில் இருந்து வெளியேறியது.

ஜேர்மனியில் 18ஆவது உலக கோப்பை உதைபந்தாட்டத் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் ஸ்டர்கர்ட்டில் நடந்த 'சி' பிரிவு லீக்





போட்டியில் நெதர்லாந்து -ஐவரிகோஸ்ட் அணிகள் மோதின. ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் நெதர்லாந்துக்கு பிறி-கிக் வாய்ப்பு கிடைத்தது. இந்த வாய்ப்பில் ராபின் வான் பெர்சி அருமையான கோல் அடிக்க நெதர்லாந்து 1-0 என்ற முன்னிலை பெற்றது. ஆட்டத்தின் 27ஆவது நிமிடத்தில் நெதர்லாந்தின் நட்சத்திர வீரரான ராட்வான் நிஸ்டல்ரூய், ஐவரிகோஸ்ட் தற்காப்பை தகர்த்து அருமையான கோல் அடித்தார். இதற்கு பிறகு ஐவரிகோஸ்ட் கடுமையாகப் போராடியது. 32 ஆவது நிமிடத்தில் இந்த அணியின் திடியர் ஜோகாரா 25 மீற்றர் தூரத்தில் இருந்து அடித்த பந்து கோல் போஸ்டில் பட்டு பறக்க வாய்ப்பு வீணானது. 38ஆவது நிமிடத்தில் ஐவரிகோஸ்ட் பதிலடி கொடுத்தது. இந்த அணியின் பகாரி கோன் பிரமாத கோல் அடித்து அசத்தினார். முதல் பாதி முடிவில் நெதர்லாந்து 2-1 என்ற முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியில் ஐவரிகோஸ்ட் தாக்குதல் ஆட்டத்தை கையாண்டது. 55 ஆவது நிமிடத்தில் அப்துல்யா மெய்ட் அடித்த பந்து, நெதர்லாந்து கீப்பர் எட்வின் வான்டர்சர் கையில் தஞ்சம் புகுந்தது. இதற்குப் பிறகு நெதர்லாந்து வீரர்கள் நிறைய முயற்சி செய்தனர். ஆனால் மேலும் கோல் எதுவும் அடிக்கவில்லை. இறுதியில் நெதர்லாந்து அணி 2-1 என்ற கோல் கணக்கில் வென்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியது. நெதர்லாந்து வெற்றியை தொடர்ந்து ஆர்ஜென்டினாவும் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

## அங்கோலா– மெக்சிக்கோ ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது

அருமையாக ஆடிய ஆபிரிக்காவின் அறிமுக அங்கோலா அனுபவ மெக்சிகோவுக்கு அதிர்ச்சி கொடுத்தது. போட்டி கோல் எதுவும் அடிக்கப்படாமல் சமநிலையில் (0-0) முடிய, இரு அணிகளும் தலா ஒரு புள்ளி பெற்றன. இதன்மூலம் 10 பேராக விளையாடிய அங்கோலா உலக கோப்பை வரலாற்றில் முதல் புள்ளியை பதிவு செய்து





மகிழ்ந்தது.

ஜேர்மனியில் 18ஆவது உலக கோப்பை உதைபந்தாட்ட தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த 'டி' பிரிவு லீக் போட்டியில் மெக்சிகோ அங்கோலா அணிகள் மோதின. ஈரானை வென்ற உற்சாகத்தில் மெக்சிகோ களமிறங்கியது. ஏற்கனவே போர்த்துக்கலிடம் தோற்ற அங்கோலா கட்டாய வெற்றியை எதிர்நோக்கி களம் புகுந்தது. முதல் பாதியில் மெக்சிகோ முழுமையாக ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் அருமையான வாய்ப்பு கிடைத்தது. ஆனால் மெக்சிகோ அணித்தலைவர் ரபேல் மார்க்கஸ் கோல் போஸ்டுக்கு வெளியே அடித்து ஏமாற்றினார். 45ஆவது நிமிடத்தில் கிலர்மோ பிரான்கோ மின்னல் வேகத்தில் அடித்த பந்தை அங்கோலா கோல் கீப்பர் ஜாவ் ரிக்கார்டோ துடிப்பாக தடுத்து விட்டார். முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க இயலவில்லை.

இரண்டாவது பாதியில் மெக்சிகோ வீரர்கள் எதிரணியின் பெனால்டி ஏரியாவில்தான் விளையாடினர். கோர்னர் பிறி-கிக் வாய்ப்புகளை பெற்றபோதும் முற்றுச் செய்ய இயலாததால் கோல் அடிக்க முடியவில்லை. அங்கோலா கீப்பர் ஜாவ் ரிக்கார்டோ மெக்சிகோவின் அத்தனை வாய்ப்புகளையும் தடுத்து அசத்தினார். 78ஆவது நிமிடத்தில் பந்தை கையால் தடுத்த ஆன்ட்ரி மகாங்கா, சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட அங்கோலா 10 பேருடன் விளையாடியது. இந்த வாய்ப்பையும் மெக்சிகோ பயன்படுத்திக் கொள்ள தவறியதால் போட்டி சமநிலையானது.

## இலங்கை நேரப்படி இன்றைய போட்டிகள்

| அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|
| ஜப்பான் – குரோஷியா | நூர்ம்பெர்க் | 6.30 |
| பிரேசில் – அவுஸ்திரேலியா | முனிச் | 9.30 |
| பிரான்ஸ் – தென்கொரியா | லெய்பிசிக் | 12.30 (நள்ளிரவு) |

# தானத்தில் சிறந்தது இரத்த தானம்

மனித உடலிலே ஊறும் ஒவ்வொரு துளி இரத்தமும் பெறுமதிமிக்கது. பல உயிர்களைக் காக்க உதவுவது. குருதிக்கு மாற்றீடு செயற்கையாக எதுவும் இல்லை. இயல்பாகவே மனித உடலில் ஊறும் இரத்தத்தில் 450 மில்லி மீற்றர் அளவைத் தானமாகக் கொடுப்பதன் மூலம் ஒரு உயிரைக் காப்பாற்ற முடியும்.

மூட நம்பிக்கை, பிறர் ஊட்டும் அச்சம் காரணமாக இரத்ததானம் செய்தால் பெரும் பாதிப்புக்கு உள்ளாக நேரிடும் என்ற பயத்தில் அனேகமானவர்கள் இரத்த தானம் செய்ய முன்வருவதில்லை. இந்த அச்சத்தைத் தீர்க்க இரத்த வங்கி துண்டுப் பிரசுரங்கள் மூலமும் கருத்தரங்குகள் மூலமும் உண்மை நிலையை மக்களுக்கு விளக்கி வருகின்றது. 'குருதிக் கொடை மூலம் உயிர் காக்கும் உன்னத இலட்சியத்துக்காக



ஒன்றிணைவோம்; வாருங்கள்' என அழைக்கிறது.

ஒழுங்கான குருதி தானம்; தொடர்ச்சியான – தவணைமுறைகளில் செய்யப்படுவதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி பொதுமக்கள் மத்தியில் துண்டுப் பிரசுரங்கள் மூலம் இரத்த வங்கி பிரசாரம் செய்து வருகிறது.

குருதி வழங்கலின் பின்னர் நுண் குருதிச் சுற்றோட்டத்தில் ஏற்படும் வினைத் திறனால் உடலில் புத்துணர்ச்சி ஏற்படும்.

குருதி வழங்கலுக்கு முன்னராக மருத்துவ ரீதியான உடற் பரிசோதனைகளும் குருதி மாதிரியில் செய்யப்படும் இரத்தப் பரிசோதனைகளும் உடல் நலம் தொடர்பான பொதுவான நிலையை இலவசமாக அறிய உதவுகின்றன.


இரத்ததானம் செய்வதனால் கொலஸ்ரோல் அதிகரித்து, அதனால் ஏற்படும் மாரடைப்புக்கான சாத்தியங்கள் ஒப்பீட்டளவில் குறைவதாக ஆய்வுகள் உறுதி கூறுகின்றன.

குருதி வழங்கலின் பின்னர் குருதிக் கூறுகளை உற்பத்தி செய்யும் என்பு மச்சைகளின் தொழிற்பாடு புத்துயிர்ப்பு அடைகின்றன என விளக்கும் இரத்த வங்கியின் துண்டுப்பிரசுரம் இரத்ததானம் செய்வதால் மனிதனுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது என்பதை அறிவுபூர்வமாக விளக்கியுள்ளது.

உடற்தொகுதிகளின் ஒழுங்கான நிலவுகைக்கு குருதிச் சுற்றோட்டம் இன்றியமையாதது. ஒவ்வொரு மனிதனது உடல் நிறையில் 8வீத அளவில் இரத்தம் காணப்படுகிறது. 60 கிலோ நிறையுள்ள ஒருவரில் 4.8 லீற்றர் குருதி காணப்படும். மேற்படி மொத்த அளவில் 450 மில்லி மீற்றர் அளவான குருதியே ஒரு தடவையில் குருதித் தானமாக வழங்கப்படுகிறது.

எமது உடலில் உற்பத்தியாகும் குருதியிலுள்ள கூறுகள் குறித்தநாட்களின் பின்னர் இயல்பாகவே உடலினுள் அழிந்துவிடுகின்றன. இவற்றுக்குப் பதிலான புதிய கூறுகள் மீண்டும் உற்பத்தியாக்கப்படுகின்றன. ஆகவே, மேற்குறித்த கால இடைவெளியில் அழிவடையும் இரத்தத்தின் ஒரு சிறிய பகுதியையே தங்கள் தானத்தின்போது வழங்குகிறீர்கள். இதனால் உடல்ரீதியாகவோ, உளரீதியாகவோ எத்தகைய பாதிப்பும் ஏற்படாது.

நீங்கள் வழங்கும் ஒரு சிறு துளி இரத்தத்தின் மூலம் ஊசலாடும் உயிர்களைக்



## உதிரத்தால் உயிர் காக்க உடனடியாய் வாருங்கள்!

காத்து, தாங்கள் அனுபவிக்கப்போகும் ஆத்ம திருப்தி பெரு வெள்ளத்துக்கு ஒப்பானது.



குறிப்பிட்ட அளவுகளில் இரத்ததானம் வழங்குவதனால் தங்கள் உடல் நலத்துக்கு எவ்வித தீங்கும் ஏற்படப் போவதில்லை.

தகுந்த வழிகாட்டலின் பிரகாரம் தாங்கள் குருதிதானம் செய்யும்போது உடற்தொழிற்பாடுகளின் அடிப்படையில் அதிக நன்மைகள் ஏற்படுகின்றன.

இந்த அடிப்படையில் பார்த்தால் குருதி தானத்தால் எவருக்கும் எதுவித பாதிப்புமே ஏற்படப்போவதில்லை. மாறாக, கொலஸ்ரோல் அதிகரிப்பினால் ஏற்படக்கூடிய மாரடைப்பு ஏற்படாது.

'அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டல் ஆலயம் பதினாயிரம் கட்டல்' போன்ற அறங்களிலும் பார்க்க மிகச் சிறந்தது.

'ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' எனப் பாரதி கூறியதுபோல, செய்யும் தானங்களில் எல்லாம் சிறந்தது இரத்த தானம் என்பதை உணர்ந்து இரத்த தானம் செய்ய அனைவரும் முன்வரவேண்டும்.

இரத்த தானத்தின் பெறுமதியை நன்குணர்ந்த பெற்றோர் தங்களது பிள்ளைகளையும் இரத்ததானம் செய்வதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

குருதிக் கொடையில் ஒவ்வொரு முறையும் ஈடுபடும்போது உங்களுடைய பிள்ளைகளும் உயிர்காக்கும் உன்னத பணியில் இணைந்து கொள்கிறார்கள்.

இவ்வாறான உயிர்காக்கும் உயர்ந்த தொண்டில் ஈடுபடும் பிள்ளைகள் உயிர்களிடத்தும் குடும்ப உறவுகள் மீதும் பற்றுமிக்கவர்களாக விளங்குவதனால் நற்பிரஜைகளாக எதிர்காலத்தில் மிளிர்வார்களென்பது உறுதி.

இரத்த வங்கியில் குருதிக் கொடை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் பெற்றோர்களுக்கு அருகில் பிள்ளைகள் இல்லாதவிடத்து (அவர்கள் வெளிநாட்டில் இருப்பின்) அவர்களுக்கு குருதி தேவைப்

**திலீப்**

பட்டால் தேவைப்படும் குருதியை வழங்க இரத்த வங்கி ஆவன செய்யும்.

ஒழுங்கான தவணையில் தொடர்ச்சியாகக் குருதிக் கொடை செய்வதன் மூலம் அவர்களுக்கும் வைத்திய சமூகத்தினருக்கும் இடையிலான உறவு வளர்வதனால் எதிர்காலத்தில் தங்கள் உறவுகளுக்கு வைத்திய உதவிகள் தேவைப்படுமிடத்து அவை விரைவாகவும் மிக இலகுவாகவும் கிடைக்கப் பெறுவது உறுதி செய்யப்படுகிறது.

பெற்றோர்களே,
உங்கள் உதிரத்தில் உருவான
உயிர்களுடன் வாருங்கள்– அவர்கள்
உதிரத்தால் உயிர்காக்கும்
உன்னதத்தில் சேருங்கள்

எளிமையானதும் இலகுவானதும்
இயற்கையானதும் பாதகமான
விளைவுகளற்றதுமான
ஒரே தானம் இரத்ததானமே!

தாகம் தீர்க்கத் தேவை தண்ணீர்–
உயிர் கொண்ட
தேகம் காக்கத் தருவீர் செந்நீர்!

# பரவலாக இடம்பெற்ற குண்டுவீச்சுக்கள் பழிவாங்கும் நடவடிக்கையா என மக்கள் ஐயம்

கெப்பிற்றிக் கொல்லாவ கிளைமோர் தாக்குதலையடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர் ஆகிய பகுதிகளில் விண்படைத் தாக்குதல்கள் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் முழுநாளும் தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளது.

இலங்கை வானூர்திப்படை கிபிர் மற்றும் மிக் –29, ஜெட் போர் வானூர்திகள் பெரும் எடுப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது கடும் தாக்குதல்களை நடாத்தியுள்ளன. இதனால் மக்களுக்கும் அவர்களின் உறைவிடங்களுக்கும் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இரு கிபிர் விமானங்கள் வியாழக்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் முல்லைத்தீவு வான்பரப்பில் நுழைந்து தாக்குதல்களை மேற்கொண்டன. செல்வபுரம், வட்டுவாகல் மக்கள் குடியிருப்புகளையும் கடல்கோளினால் பாதிக்கப்பட்ட நிலையில் ஏதுமற்ற ஏதிலிகளாக வாழும் மக்கள் முகாம்களையும் இலக்குவைத்து குண்டுகள் வீசப்பட்டுள்ளன. முதல் தாக்குதலில் 15 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும், குடியிருப்புகள் தீக்கிரையாகிச் சேதமாகியுள்ளதாகவும், மக்களுக்கு வாழ்வுகொடுக்கும் கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. மீண்டும் 11.57 மணியளவில் கிபிர் விண் தாக்குதல் நடைபெற்றுள்ளன.

கடல்கோள் அகதிகள் முகாம் அருகருகே 6 குண்டுகள் வீழ்ந்துள்ளன. இவற்றில் இரு குண்டுகள் வெடிக்கவில்லை. நேற்று முன்தினம் 11மணி தொடக்கம் 10 நிமிட இடைவெளியில் இக்குண்டுத்தாக்குதல் நடைபெற்றுள்ளன.

### மட்டக்களப்பிலும் தாக்குதல்

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தொப்பிகல காட்டுப்பகுதியில் வியாழக்கிழமை பிற்பகல் 3.15 மணியளவில் விமானப்படையினரின் மிக்– 29 தாக்குதலை நடாத்தியது. தரவை புலிபாய்ந்தகல் பகுதிகளில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

இதேவேளையில் வான்படைக்குச்சொந்தமான 4 கிபிர் விமானங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் மாலை 6.25 மணிமுதல் 6.35 மணிவரை நான்கு தடவைகள் குண்டுகளை வீசிவிட்டுச் சென்றுள்ளன. இந்தக் குண்டுத் தாக்குதல் 10 நிமிட நேரம் தொடர்ச்சியாக இடம்பெற்றது. அதன் பின்னர் மீண்டும் 6.45 மணியளவில் இரு கிபிர் விமானங்கள் குண்டுகளை வீசிச் சென்றுள்ளன.

இதனைத் தொடர்ந்து இரு கிபிர் விமானங்கள் மீளவும் குண்டுகளை வீசின. இதேவேளை வானில் மிக உயரத்தில் பறந்தவாறு ஏவுகணை எதிர்ப்பு சாதனங்களை இயக்கியபடியே விமானங்கள் குண்டுகளை வீசியதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### திருமலையிலும் தாக்குதல்

இதேவேளை, திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் காலை குரங்குபாலத்தில் (Monkey bridge) மற்றும் திருகோணமலை கடற்படை முகாம்களில் இருந்து பல்குழல் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

நேற்று முன்தினம் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை இத்தாக்குதல் நீடித்ததாகத் தெரியவருகிறது. (கு)

# யுத்தத்தை தவிருங்கள்

தற்போதைய நாட்டு சூழலானது யுத்தமொன்றை நோக்கிச் செல்கிறது என்பதை அனுமானிப்பது ஒன்றும் கடினமான விடயமல்ல. வடகிழக்கில் இடம்பெறுகின்ற மனிதப்படுகொலைகள் மிகக் கொடுமையான கொலைக்கலாச்சாரத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. அவ்வப்போது ஓரிருவர் கொல்லப்படுவதில் இருந்து இப்போது குடும்பம் குடும்பமாக மக்கள் கொல்லப்படுகின்ற நிலை எழுந்துள்ளது.

இந்தக் கொலைகளின் காரணமாக வடகிழக்கு பொதுமக்கள் யுத்தம் தொடங்கிவிட்டதாகவே உணருகின்றார்கள். இதன் காரணமாக ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர ஆரம்பித்து விட்டனர்.

ஊடகங்கள் முதற்கொண்டு சகலரும் போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்பு எழுந்துள்ள அமைதிச் சூழலை நம்பி மீளக் குடியேறுதல் தொடர்பில் மக்களுக்கு அதிக நம்பிக்கையை வழங்கியிருந்தனர். இதன் ஒரு விளைவாக வன்னியிலிருந்த பல குடும்பங்கள் யாழ்குடாவின் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு அண்மையில் குடியேறினர். இதேபோல வன்னியில் வாழ்ந்த திருகோணமலையைச் சேர்ந்த பல குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி கடன்பட்டு நகைகளை விற்று வீடுகளை அமைத்தனர். மேலும், இந்தியாவுக்கு சென்ற பல குடும்பங்கள் உயிரைப்பணயம் வைத்து படகுகளின் மூலமும், ஐ.ஓ.எம் போன்ற அமைப்புகளின் உதவியுடன் சட்டரீதியாகவும் இலங்கை திரும்பியிருந்தனர். ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையானது அவ்வாறு மீளக்குடியேறிய மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன் நிர்க்கதியாக்கியுள்ளது.

- ஜீ. யோகப்பிரியா

எனவே, இரு தரப்பினது நடவடிக்கைகளாலும் தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலைக்கு இருதரப்புமே பதில் கூற வேண்டும். குறிப்பாக சுமார் 20 வருடங்களுக்கும் மேலாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீண்டுமொரு யுத்தத்திற்குள் தள்ளிவிடக்கூடாது என்பதே இங்கு மிக முக்கியமானதாகும். எனவே, தயவு செய்து யுத்தத்தை தவிருங்கள்.

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை – 29

1. எந்த சமூகத்தினுள் மாத்திரமே தமது ஆளுமையின் கட்டற்ற, பூரணமான வளர்ச்சி சாத்தியமாகவிருக்குமோ, அந்த சமூகத்தின் பால் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உண்டு.


## தயாரிப்பாளர் தேவை

யங் ஏசியா தொலைக்காட்சி நிறுவனத்தின் விழிப்பு தொலைக்காட்சி நிகழ்ச்சியின் தயாரிப்புக் குழுவில் இணைந்து பணியாற்ற உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம். இனப்பிரச்சினை தொடர்பில் ஆழ்ந்த ஈடுபாடும் அறிவும் உங்கள் அடிப்படை தகுதிகளாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் தமிழ் மொழியில் தேர்ச்சியுடன் ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் தேர்ச்சி வேண்டப்படுகிறது. சுயவிபரக்கோவை, அண்மையில் எடுத்த புகைப்படம் ஆகியவற்றுடன் உங்கள் விண்ணப்பத்தை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தயாரிப்பாளர்
விழிப்பு
யங் ஏசியா டெலிவிஷன்
YATV இல. 713 டி.பி. விஜேசிங்க மாவத்தை,
பெலவத்தை பத்தரமுல்லை.





## இலங்கை இறந்து கொண்டிருக்கிறது!

எங்களின் வாழ்க்கை
முடங்கிப்போனது
இலங்கையின்
கௌரவ சமாதானம் போல

பிணங்களின் மீது
அரசியல் சித்தாந்தம்
அரகேற்றப்படுகின்றது

பிணங்களின் கணக்கை
பிஞ்சுக் குழந்தைகளும்....

கொலை வெறியாட்டம்
கொள்கைப் பிரகடனமாய்
மக்கள் மீது
மீண்டும் மீண்டும்.....

தினந்தினம் மனிதர்கள்
பிணங்களாக
குருதியில்குளித்துக்கொள்ள
தமிழர் தாயகம் நனைகிறது

களையெடுப்பு
இங்கே கால்பதித்திருக்கிறது
முடிவில்
தமிழர் வாழ்க்கை
தரிசாய் ஆகின்றது....

கண்டனங்களுக்கும்
அனுதாபங்களுக்கும் மட்டும்
என்றுமே வசந்தகாலம்

வேலிகளே
பயிர்களை மேய்வதால்
பயிர்களுக்கு இனி
இறந்த காலம்

இறைமை ஐக்கியம்
சுதந்திரம் சுயநிர்ணயம்
என்பவற்றை சுமந்தப்படி
இலங்கை
இறந்துக்கொண்டிருக்கிறது.

சூரிய நிலா
யாழ்ப்பாணம்

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையும் பிரதிபலிப்புகளும்

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகள் மீது விதித்த தடையானது அரசியல் அரங்கில் என்றுமில்லாத பரபரப்பை உருவாக்கியுள்ளது. இத்தடையை பெரும்பாலான சிங்கள ஆங்கில ஊடகங்கள் வரவேற்றுள்ளன. அதேவேளை தமிழ் ஊடகங்கள் அநீதியானது என தெரிவித்துள்ளன.

இந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையானது நியாயமானது, சமாதானப் பேச்சுக்களை வலுப்படுத்தக்கூடியது என்ற நம்பிக்கைகள் சிங்கள தரப்பு அரசியல்வாதிகளிடையேயும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கட்சிகளிடமும் காணப்படுகிறது. அவ்வாறான அரசியல் வாதிகள் சிலரது கருத்துகள் இவ்வாறு அமைகின்றன.

அத்துரலியே ரத்ன தேரர் – ஹெல உறுமய

"உண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் புலிகளை தடைசெய்தமை' அதற்கு முன்பே செய்திருக்க வேண்டிய விடயம். ஏனென்றால் உண்மையில் புலிகளது பலம் வன்னியிலோ அல்லது முல்லைத்தீவிலோ இருக்கவில்லை. ஐரோப்பாவை அடிப்படையாகக் கொண்ட பலமாகத்தான் அது இருந்தது. அதனால் ஐரோப்பிய ஒன்றியம் புலிகளை தடைசெய்தமை என்பது அண்மையில் நாம் அடைந்த வெற்றி என்றே நாம் காண்கிறோம்."

திஸ்ஸ அத்தனாயக்க – ஐக்கிய தேசியக் கட்சி

"இதில் இரண்டு பக்கங்கள் உள்ளன. குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச சமூகம் தமிழீழ விடுதலைப்புலிகளை தடைசெய்துள்ளது. இதில் பலன் பெறுவது அரசின் கடமையாகும்?.

லக்ஷ்மன் கிரியல்ல - ஐக்கிய தேசியக் கட்சி

"இந்த தடையின் மூலம் நாம் விடுதலைப்புலிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகளை கைவிட்டு சமாதான பேச்சுக்கு திரும்புவார்கள் என எதிர்பார்க்கிறோம். அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் கூறியது போல் இதற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பேற்க வேண்டும்."

இதேவேளை தற்போதைய அரசாங்கமானது சமாதான நடவடிக்கைகளில் தமது சக பங்காளிகளான விடுதலைப்புலிகள் குறித்து கொண்டுள்ள கடுமையான நிலைப்பாடுகளின் வெளிப்பாடாக இவ்வாறான தடைக்கு அழுத்தம் கொடுத்தமை அமைந்திருந்தது.

அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா இது தொடர்பில் கூறும் போது


"விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளை கைவிட்டு சமாதானமாக செயற்பட இது நல்ல வாய்ப்பாகும்" என்கிறார்.

அதேபோல அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பாலித கொகன்ன " விடுதலைப்புலிகள் 25 ஐரோப்பிய நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளனர். இதற்கு மேலாக அவுஸ்திரேலியா, மலேசியா, இந்தியா, அமெரிக்கா, கனடாவிலும் தடை செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் 'புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டியுள்ளது" எனக் கருத்து தெரிவித்துள்ளார்.

ஆனால், இத்தடை தொடர்பில் தமிழ் கட்சிகள் தமது கடுமையான விசனத்தையும், சமாதான நடவடிக்கைகளை பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் குறித்து கவலை கொண்டுள்ளனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

"ஒரு பகுதியினரை மாத்திரம் தடை செய்ததானது நிச்சயமாக அது இந்த பேச்சுவார்த்தையை பிறிதொரு தடத்தில் தள்ளிவிட, அந்த பேச்சுவார்த்தைக்கு குந்தகம் விளைவிக்கவே வாய்ப்பை வழங்கியுள்ளது. மேலும், இந்த சிங்களவாத அதி தீவிரவாத சக்திகள் பேச்சுக்கு எதிராக செயற்படுவதற்கும், யுத்தத்திற்கும் ஆதரவாகவும், யுத்த முனைப்புடன் செயற்படுவதற்கும் கூட இந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை வழிவகுத்திருக்கிறது" எனத் தெரிவிக்கிறார்.



மேலக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன்

"இலங்கையில் வாழும் தமிழ் மக்களை, தமிழ் தேசிய இனத்தினை, சிங்கள மக்களுக்கு சமமான பூரண உரிமை கொண்ட, ஆட்சி உரிமையைக் கொண்ட, இறைமையைக் கொண்ட, பூரண உரிமை கொண்ட சமூகமாக சிங்கள சமூகத்தினால் ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு இருக்கிறது. அதை செய்ய முடிந்தால் மாத்திரமே இந்த சமாதான முன்னெடுப்புகள் முன்னேற முடியும். அதை உலக சமூகம், சர்வதேச சமுதாயம் செய்ய வேண்டும். அந்த நோக்கத்திலே இலங்கையில் இருக்கக் கூடிய சிங்கள பௌத்த அடிப்படைவாத சக்திகளுக்கு நெருக்குதலை தடைகளை ஒரு தலைப்பட்சமாக செயற்படுத்துவதன் மூலமாக நிச்சயம் சிங்கள அடிப்படைவாத கரங்களைத்தான் சர்வதேச சமூகம் வளப்படுத்துகிறது என்ற நியாயமான சந்தேகம் தமிழ் மக்களுக்கு இருக்கிறது. அதைப் போக்கிட வேண்டிய கட்டாயம் இன்று சர்வதேச சமூகத்திற்கு இருக்கின்றது" என்ற கருத்தைக் கொண்டுள்ளார்.

அதேபோல இத்தடை தொடர்பில் கொழும்பு பல்கலைகழகத்தின் அரசியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். ஐ. கீத பொன்கலனின் கருத்து இவ்வாறாக அமைகிறது.

"தென்பகுதியில் விடுதலைப்புலிகள் பலவீனமாக இருக்கின்றார்கள் என்ற அபிப்பிராயம் ஏற்கனவே காணப்படுகின்றது. இத்தகைய சூழலில் சர்வதேச ரீதியாகவும் அவர்கள் பலவீனம் பட்டுவிட்டார்கள் என்ற ஒரு அபிப்பிராயம், இராணுவ ரீதியாக இந்த பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற அபிப்பிராயத்தை தென்னிலங்கையில் தூண்டி விடக் கூடும்".

இதற்கிடையே இந்த தடையானது 2002 பெப்ரவரி 22ல் ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டை கண்காணிக்கும் குழுவினரது செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக கண்காணிப்பு குழுவில் அங்கம் வகிக்கும் சுவீடன், டென்மார்க், பின்லாந்து, ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கண்காணிப்பு பணியிலிருந்து விலக வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

அதேபோல விடுதலைப்புலிகள் மீதான இத்தடையானது விடுதலைப்புலிகளை ஆயுதப்

கொழும்பு பல்கலைகழகத்தின் அரசியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். ஐ. கீத பொன்கலன் கருதுகின்றார். அவர் மேலும் கூறும் போது

"விடுதலைப்புலிகளும் கூட சர்வதேச அபிப்பிராயம் என்பதை அடிப்படையாகக் கொண்டு தான் இவ்வளவு காலமும் பேச்சுவார்த்தை மேசையில் அல்லது சமாதான முயற்சிகளில் இருந்து வந்திருக்கிறார்கள். ஆகவே சர்வதேச அபிப்பிராயம் இப்போது முற்று முழுதாக அவர்களுக்கு எதிராக மாறியிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் தொடர்ந்தும் ஏன் பேச்சுவார்த்தையில் இருக்க வேண்டும் அல்லது சமாதான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்ற கேள்வி ஏற்படுகின்றது. மேலும், ஆயுதரீதியான தீர்வை நோக்கி நகர்வதற்கான ஒரு சந்தர்ப்பம் சமாதான முயற்சிகளுக்கு எதிராக இருந்தால் இந்தத் தடை சமாதான முயற்சிகளுக்கு எதிராக அல்லது ஒரு பின்னதள்ளக் கூடிய ஒரு தடை எனக் கருதலாம்." என்கிறார்.

எது எவ்வாறாயினும் வடகிழக்கானது சுமார் 60 வருடங்களுக்கும் மேலான இன நெருக்கடி காரணமாக மோசமான பாதிப்புகளை எதிர் கொண்டுள்ளது. இப்பகுதிகள் அபிவிருத்தியடைய வேண்டுமாயின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும். மேலும் போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து நிலைத்திருப்பதானது அரசியல் தீர்வில் தங்கியிருப்பதையே தற்போதையே வன்முறைகள் வெளிப்படுத்துகின்றன என்பதை உணர்ந்து செயற்படுவதன் மூலம் சமாதானத்தை பாதுகாக்க முடியும்.

– என். ஜீவேந்திரன்

எனவே, ஐரோப்பிய ஒன்றியமானது இந்த அரசியல் தீர்வை நோக்கி இரு தரப்பையும் தள்ளுகின்ற செயற்பாடுகளை மேற்கொள்வதே அவசியமாகும். அவ்வாறு பார்க்கும் போது ஒருபுறம் விடுதலைப்புலிகள் வன்முறைகளைக் கைவிட்டு பேச்சுக்கு செல்வதற்கான அழுத்தமாக இத்தடை நோக்கப்படுகின்றது. மறுபுறம் ஐரோப்பிய ஒன்றியமானது கடுமையான நிலைப்பாடுடைய ஒரு அரசாங்கத்தை இத்தடை மூலம் ஊக்கப்படுத்தியுள்ளது என்ற குற்றச்சாட்டு குறித்தும் ஐரோப்பிய ஒன்றியம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அத்தோடு இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பில் அதற்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் அதிக கரிசனை கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது.

விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜேசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம் 0112787041-9 தொலைநகல் இலக்கம் 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# நேபாள பிரதமர்-மாவோ.தலைவர் நேரடியாகச் சந்தித்துப் பேச்சு!

(காத்மாண்டு)

நேபாளத்தில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரவும், அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடத்தவும் பிரதமர் கிரிஜா பரசாத் கொய்ராலா மற்றும் மாவோயிஸ்ட் தலைவர் பிரசந்தா இடையே நேற்று முன்தினம் முதல் சுற்றுப் பேச்சு வார்த்தை நடந்தது.

நேபாளத்தில் கம்யூனிச ஆட்சியை அமைய வேண்டும் என்பதற்காக கடந்த 10ஆண்டுகளுக்கும் மேலாக மாவோயிஸ்ட்டுகள் போராடி வருகின்றனர். வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வன்முறைக்கு 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இதுவரை பலியாகியுள்ளனர்.


சில மாதங்களுக்கு முன் மன்னராட்சிக்கு எதிராக நடந்த போராட்டத்தின் இறுதியில் ஏழு கட்சி கூட்டணி சார்பில் இடைக்கால அரசு அமைந்துள்ளது. கிரிஜா பிரசாத் கொய்ராலா பிரதமராக பதவியேற்றுள்ளார். இந்தப் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் மாவோயிஸ்ட்டுகள் போர் நிறுத்தம் செய்துள்ளனர்.

மாவோயிஸ்ட்டுகளின் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவரவும், அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை விரைவில் நடத்தவும் அவர்களுடன் நேபாள அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. உள்துறை அமைச்சர் கிருஷ்ணா சிதவுலா, மாவோயிஸ்ட் தலைவர் பிரசந்தவுடன் வியாழக்கிழமை பேச்சு நடத்தினார்.

இதைத் தொடர்ந்து, பிரதமர் கொய்ராலாவை பிரசந்தா சந்திப்பார் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி, மாவோயிஸ்ட் தலைவர் பிரசந்தா பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலாவை அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்தார். கடந்த பத்து ஆண்டுகளில் மாவோயிஸ்ட் தலைவரும் நேபாள பிரதமரும் சந்தித்துப் பேச்சு நடத்துவது இதுவே முதல்முறை. இரண்டு மணி நேரம் நடந்த இந்த சந்திப்பில் இருதரப்பு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். மாவோயிஸ்ட் தலைவர் பிரசந்தா வருகையையொட்டி பிரதமர் இல்லத்தில் கடும்மயான பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

பேச்சுவார்த்தையின் போது, அரசியல் நிர்ணய சபை அமைப்பது தொடர்பான பணிகள் மற்றும் அதற்கான தடைகளை அகற்றும் நடவடிக்கைகளை கண்காணிக்க, ஐ.நா.வின் உதவியோடு அமைதிப் பணியாளர்கள் மற்றும்மனித உரிமை அமைப்பினர் அடங்கிய கண்காணிப்பு குழுவை அமைப்பது என தீர்மானிக்கப்பட்டது. (து)

உலக தரிசனம்




# 3 இலட்சம் பேரை ஏழைகளாக்கிய பூகம்பம்

(மணிலா)

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் கடந்த மாதம் ஏற்பட்ட பூகம்பத்தில், வீடுகளை, வேலைகளை இழந்து பிழைக்க வழியின்றி 3 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் ஏழைகள் ஆகிவிட்டனர்.

ஆசிய வளர்ச்சி வங்கி (ஏடிபி) நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது. இந்த ஆய்வு அறிக்கை பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள வங்கியின் தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது.

ஜாவா தீவில் உள்ள 67,000 குடும்பங்களை பூகம்பம் நடுத்தெருவில் நிறுத்தி உள்ளது. சராசரியாக ஒரு குடும்பத்தில் 5 பேர் இருப்பதாக, ஜாவா மற்றும் யோக்யகார்தா மாகாணங்களில் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுள்ள உதவி அமைப்புகள் மதிப்பிட்டுள்ளன.

இதன்படி, பூகம்ப பேரழிவால் பாதிக்கப்பட்டு பிழைக்க வழியின்றித் தவிப்போர் 3 இலட்சம் பேர். இவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருவது மறுவாழ்வுப் பணிகள் எந்த அளவுக்கு வேகமாக நடைபெறுகின்றன என்பதைப் பொறுத்தது.

பூகம்ப பாதிப்பால், இந்தோனேசியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.1 சதவீத வீழ்ச்சி இருக்கும் என்று கருதப்படுகிறது. பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொருளாதார வளர்ச்சி இந்தஆண்டு 1.3 சதவீதமும், அடுத்த ஆண்டு 4.2 சதவீதமும் குறையும் என்று அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது. (து)

# கூட்டுப்படையினரின் தாக்குதலில் ஆப்கானில் 40 தீவிரவாதிகள் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தென்கிழக்குப் பகுதியில் அமெரிக்க கூட்டுப் படையினர் நடத்திய வான் மற்றும் தரைவழித் தாக்குதலில் 40 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு நடந்த படையெடுப்பின் மூலம் ஆப்கானில் இருந்த தலிபான் அரசு அகற்றப்பட்டது. அங்கு தற்போது ஹமீத் கர்சாய் தலைமையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு உள்ளது.

இருப்பினும், தலிபான் தீவிரவாதிகளின் அட்டகாசம் தொடர்கிறது. இதனால் ஒபரேஷன் மவுன்டெய்ன் தர்ஸ்ட் என்ற பெயரில் அமெரிக்கக் கூட்டுப்படையினர் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஆப்கானிஸ்தானின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள பாக்லிகா மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமை அமெரிக்கக் கூட்டுப் படையினர் தாக்குதல் நடத்தினர். வான்வழியாகவும், தரைவழியாகவும் நடந்த இந்த தாக்குதல் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது.

அமெரிக்கக் கூட்டுப் படையினர் நடத்திய இந்தப் பெரிய அளவிலான தாக்குதலில் 40 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் கூட்டுப்படை வீரர் ஒருவர் காயம் அடைந்தார் என்றும் அமெரிக்க இராணுவம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# மசூதியில் குண்டுவெடிப்பு 11பேர் பலி; 20பேர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கில் மறுசீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் வெளிநாட்டினரை தீவிரவாதிகள் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இந்த நிலையில் ஷியா, சன்னி பிரிவினருக்கும் இடையேயான மோதலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தீவிரவாதிகளின் தலைவன் சர்காவி கொல்லப்பட்டதில் இருந்து ஷியா பிரிவினர்கள் மீதான தாக்குதல் அதிகரித்து வருகிறது. பாக்தாத் நகரின் வடக்குப் பகுதியில் ஷியா பிரிவினரின் புரகாமசூதி உள்ளது. இந்த மசூதியில் நேற்றுமுன்தினம் தொழுகை நடந்து கொண்டிருந்தது.

அப்போது அந்தப் பகுதியில் திடீர் என்று குண்டுவெடித்தது. அந்த மசூதியின் ஒரு பகுதி இடிந்து தரைமட்டமானது. இதில் அங்கு தொழுகைக்கு வந்த 11பேர் உடல் சிதறி பலியானார்கள். மேலும் 20 பேர் காயம் அடைந்தனர். அந்தப் பகுதி முழுவதும் பலியானவர்களின் உடல்கள் சிதறிக் கிடந்தன.

பெண் வேடம்போட்டு அந்த மசூதிக்கு வந்த சன்னி பிரிவு தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்து இந்தத் தாக்குதலை நடத்தியது. விசாரணையில் தெரியவந்தது.

இதே மசூதியில் கடந்த ஏப்ரல் மாதமும் வெடிகுண்டு தாக்குதல் நடந்தது. அப்போது நடந்த தாக்குதலில் 71பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (து)



அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் உள்ள பிளாக்ஸ்டாப் என்ற இடத்தில் உள்ள காட்டுப் பகுதியில் திடீரென தீ பிடித்துக் கொண்டதால் சுமார் 100 வீடுகளை காலி செய்ய வேண்டியதாகிவிட்டது.

# தலிபான் அமைப்புக்கு நேட்டோ எச்சரிக்கை

(ஒட்டாவா)

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதை நேட்டோ அமைப்பு நாடுகள் வேடிக்கை பார்க்காது.

போரால் சீர்குலைந்து போன ஆப்கானிஸ்தானில் நடைபெறும் சீரமைப்புப் பணிகளை குலைக்க யார் முயற்சித்தாலும் அதை இரும்புக்கரம் கொண்டு நேட்டோ நாடுகள் ஒடுக்கும் என்று நேட்டோ தலைமைச் செயலர் தெரிவித்தார். ஆப்கானிஸ்தானில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கக் கூடாது என்பதில் நேட்டோ உறுதியாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (து)

# சீனாவில் மழை; 25பேர் பலி


(ஷாங்காய்)

சீனாவில் பெய்துவரும் பலத்த மழை மற்றும் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக 25 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள குய்ஜோ மாகாணத்தில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது.

இதில் 400வீடுகள் சேதமடைந்தன. 30 பேர் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சீனாவின் இதர மாகாணங்களிலும் கனமழை பெய்துவருகிறது. இதில் ஏராளமானோர் வீடுகளை இழந்துள்ளனர். (து)



சைக்கிளின் நாடு என்று அழைக்கப் படும் சீன நகரங்களில் இப்போது சைக்கிள் ஓட்ட இடம் இல்லாத படி கார்களின் உபயோகம் அதிகரித்து விட்டது.

# சலுகைகளை பரிசீலிக்க தயாராகவுள்ளது ஈரான்

(ஷாங்காய்)

அணுசக்தி திட்டங்களை கைவிட்டால் பல்வேறு சலுகைகளை அளிக்கத் தயார் என ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ள யோசனை யை பரிசீலிக்கத் தயார் என்று ஈரான் அறிவித்துள்ளது. சீன அதிபர் ஹியூ ஜிந்தாவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்த பிறகு ஈரான் அதிபர் மகமது அஹமதி நிஜாத் கருத்துக் கூறுகையில்,

ஈரானின் அணு சக்தித் திட்டங்கள் விஷயத்தில் அமெரிக்கா தலைமையிலான மேலைநாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலமாக தீர்த்துக் கொள்ள ஈரான் விரும்புகிறது.

செறிவூட்டிய யுரேனியம் தயாரிப்பதை கைவிட்டால் ஈரானுக்கு தரக்கூடிய உதவிகள் அடங்கிய திட்டத்தை ஐரோப்பிய யூனியன் வெளியிட்டுள்ளது. இது முந்தைய திட்டத்தை விட சற்று மேம்பட்டதாகும்.

அணுசக்தி திட்டங்கள் என்ற பெயரில் அணு ஆயுத உற்பத்தியில் தீவிரமாக ஈரான் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா கூறிவருகிறது. இதை நாம் ஏற்கவில்லை என்றார். (து)

தியாக உணர்வு தோன்றிவிட்டால் எத்தகைய சங்கடங்களையும் கருதாது தமது இலட்சியத்தில் ஈடுபாடு கொண்டு செயலை திறம்படச்செய்து முடிக்கும் பேராற்றல் ஏற்படும்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

# ஈழத் தமிழர் விடயத்தில் தமிழக அரசு அசமந்தமா?

இலங்கையில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்து விட்டது. தமிழர் குடியிருப்புக்களை நோக்கி விமானக் குண்டு வீச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

இதன் காரணமாக தங்கள் மண்ணில் வாழ முடியாமல் ஈழத் தமிழர்கள் தமிழகத்திற்கு அகதிகளாகச் செல்கின்றனர்.

கடல் வழிப் பயணம் எதுவித பாதுகாப்பு இல்லை என்று தெரிந்தும் தங்கள் உயிரைக் கையில் பிடித்த வண்ணம் தமிழகத்திற்கு ஈழத் தமிழர், அகதிகளாகச் செல்வது தமிழக அரசுக்கு எதுவித இரக்கமும் ஏற்படவில்லை என்பது புரிகின்றது.

இலங்கையைத் தனித்து பௌத்த சிங்கள நாடாகக் கருதி தமிழ் மக்கள்மீது அரசால் நடத்தப்படும் அராஜகத்தை தட்டிக் கேட்கும் உரிமையும் கடமையும் தமிழக அரசுக்குண்டு.

எனினும் அது விடயத்தில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி மௌனம் சாதிப்பது வேதனைக்குரியது.

கண்ணகிக்கு சிலை எடுப்பதும் தமிழைச் செம்மொழியாக்குவதும் தேவையானதாயினும் தமிழ் உடன்பிறப்புக்கள் தங்கள் உயிருக்காகப் போராடும்போது கண்ணகிக்குச் சிலை எடுப்பதை அந்தக் கண்ணகியே விரும்பமாட்டாள்.

தமிழ் என்னுயிர், தமிழர் என் உதிரம் என்று அழகு தமிழ் பேசிய கலைஞர் கருணாநிதி இப்போது மட்டும் மௌனமாக இருப்பதேன்?

ஆட்சியிலிருக்கும்போது ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பது அரசியல்வாதிக்கு அழகல்ல என்ற நினைப்பா? அல்லது ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பதில் வை.கோபாலசாமி உச்சம் பெற்றிருப்பதா? அதிலிருந்து தாம் விலகிக் கொள்ள வேண்டும் எனக் கலைஞர் எண்ணுகின்றாரா?

பேச்சளவில் மட்டும் தமிழைப் பாதுகாக்க நினைத்தால் தமிழைப் பேசுவதற்கு தமிழர் இருக்க மாட்டார் என்பதை முதுமையிலேனும் கலைஞர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மத்தியிலும் மாநிலத்திலும் கலைஞர் கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை பெற்றிருப்பதால் ஈழத் தமிழர்களுக்கு உதவ இதுவே தகுந்த சூழ்நிலையாகும்.

இச் சூழ்நிலையை தவற விட்டால் இதுபோன்று வேறு அரசியல் கள நிலைமை மீண்டும் ஒரு தடவை இந்தியாவில் ஏற்படும் எனக் கூறிவிட முடியாது.

எனவே கலைஞர் கருணாநிதி தமிழுக்குத் தொண்டாற்ற நினைத்தால், ஈழத் தமிழர்கள் நம் உடன்பிறப்புக்கள் எனக் கருதினால் மத்திய அரசின் மூலம் இலங்கை அரசை எச்சரிக்கை செய்ய வேண்டும்.

ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும். இதைவிடுத்து கடல் கடந்து உயிர் தப்பி தமிழகம் வந்தால் அவர்களை மண்டபம் முகாமில் தங்க வைப்போம். வழங்குகின்ற இரண்டு ரூபா அரிசியை அவர் களுக்கும் கொடுப்போம். இது செய்தால் போதாதா எனக் கலைஞர் கருணாநிதி தன்னளவில் கேட்பாராயின் அதுவே அவர் தமிழினத்திற்குச் செய்யும் பெருங்கெடுதியாகும்.

# ஆட்கடத்தலில் இருந்து உங்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பு தேடுங்கள்-அரசியல்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வலுக்கட்டாயப்படுத்தி சில குழுக்கள் சிறார்களை கடத்தி வரும் நிலையில் உங்கள் குழந்தைகளுக்குரிய பாதுகாப்பை நீங்களே தேடுங்கள் என மட்டக் களப்பு மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவமும் இராணுவத்துடன் சேர்ந்து இயங்குகின்ற துணைக்குழுவினரும் இணைந்து தற்போது சிறார்களைக் கடத்திச் செல்லும் நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்டத்தில முழ்முரமாக ஆரம்பித்துள்ளனர்.

இவை மிக மோசமானதொரு நெருக்கடி நிலையை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. மாங்கேணி கிராமத்திற்குள் சென்ற படையினரும் அவர்களுடன் சேர்ந்து இயங்குகின்ற துணைக்குழுவினரும் அங்குள்ள அப்பாவிச் சிறார்கள் 15 பேரை வலுக்கட்டாயப்படுத்தி பிடித்துச் சென்றுள்ளனர். இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர்கள் 12-19 வயதிற்குட்பட்ட சிறார்களாவர்.

இதேவேளை, 14.06.2006 அன்று கிரான் கிராமத்திலுள்ள 20 சிறார்களைக் கடத்திச் சென்றுள்ளனர். 15.6.2006 அன்று சந்திவெளிக்கிராமத்திலுள்ள 05 இளைஞர்களைக் கடத்திச் சென்றுள்ளனர். அதே நாளில் கிரான் முறக்கொட்டாஞ்சேனை, வாழைச்சேனை ஆகிய கிராமங்களில் இராணுவமும் துணைக்குழுவொன்றும் சேர்ந்து சுற்றிவளைத்து மேலும் பல இளைஞர்களைக் கைதுசெய்துள்ளன.

இராணுவமும் துணைக்குழுக்களும் கடத்திச்சென்று அவர்களுக்கு கட்டாய ஆயுதப் பயிற்சி அளித்து வருகின்றன.

ஏற்கனவே பேரினவாத அரசு திட்டமிட்டு மேற்கொண்டு வரும் தமிழின அழிப்பு இராணுவக் கெடுபிடிகளால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இவ்வாறான ஆட்கடத்தல் சம்பவங்கள் மேலும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே இத்தகைய நாசகாரச் செயல்களில் இருந்து உங்கள் பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டியது அனைத்துப் பெற்றோரினதும் கடமையாகும். ஆகவே உங்கள் அன்புச்செல்வங்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகிறோம். அதேவேளை உங்களுக்கு பாதுகாப்பு இல்லையெனில் அதற்கான பாதுகாப்பினை வழங்குவதற்கும் தயாராகவுள்ளோம்.

அத்துடன் இத்தகைய கொடூரத்தனங்களுக்கு முடிவு கட்டி எமது தாயக மக்களின் பாதுகாப்பை விரைவாக உறுதிப்படுத்துவதற்கான காலம் அண்மித்துக்கொண்டிருக்கிறது என்பதையும் தங்களுக்கு தெளிவுபடுத்துகின்றோம்.

இதேவேளை, இந்தக் கோரத்தாண்டவ நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவந்து விடுதலையை வென்றெடுக்க அனைவரும் அணிதிரளுமாறு வேண்டுகின்றோம். அத்து டன் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தும் வகையில் வெகு ஜனப் போராட்டங்களை முன்னெடுக்க அணிதிரள அன்புடன் அழைக்கின்றோம். (க)

# "இலங்கையில் இனப்படுகொலையை நிறுத்த ஒரு நாடாளுமன்றத் தீர்மானம்"

## எனும் தலைப்பிட்டு அவுஸ்திரேலிய பிரதமருக்கு ஈழத்தமிழர் அமைப்புகள் மனு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் தங்கள் வாழ்வை தாங்களே நிர்ணயிக்கும் ஆர்வம், தம் விதியைத் தாமே கட்டுப்படுத்தும் ஆர்வம், தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தம் தாய் மண்ணைத் தாமே ஆளவிரும்பும் ஆர்வம் ஆகியவற்றையும் தம் தாய் மண்ணை எவருக்கும் விட்டுக்கொடுக்காது தக்கவைக்கும் உரிமையும் சுயநிர்ணய உரிமையும் அவர்களுக்கு உண்டு என்பதையும் ஏற்கவேண்டும் என்று அவுஸ்திரேலிய பிரதமருக்கு அங்கு வாழும் ஈழத்தமிழர்களின் அமைப்புக்கள் மனு அனுப்பியுள்ளன.

அந்த மனுவின் முழுவடிவம்,

அன்புள்ள பிரதமருக்கு,

2002ஆண் டுபெப்ரவரி மாதம் 23ஆம் திகதி இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது. இந்த ஒப்பந்தத்துக்கு அவுஸ்திரேலியா தன் முழு ஆதரவையும் நல்கியது கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு அடித்தளத்தைக் கூட அமைக்கவில்லை. ஆனால் இலங்கை அரசோ தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை மீண்டும் வன்முறையால் அடக் குகிறது. உண்மையில் போர் நிறுத்த ஒப்பந்தம் முறியும் நிலைக்கு இன்று வந்துள்ளது.

இலங்கை படைகளாலும் இலங்கை அரசின் உதவியுடனும் தூண்டுதலுடனும் இயங்குகின்ற தமிழ்த் துணைப்படைகளாலும் இலங்கையின் வடக்கு- கிழக்கில் தொடர்கின்ற வன்முறைகள், கொலைகள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றால் அவுஸ்திரேலியாவில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் கவலைப்படுகின்றனர். வேதனைப்படுகின்றனர் எரிச்சலூட்டப்படுகின்றனர்.

சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இக் கொலைகளில் இலங்கை அரச படையினரில் சில பகுதியினர் சம்பந்தப்பட்டுள்ளது தமக்கு தெட்டத்தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளனர். பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், பொதுமக்களுக்குரிய இடங்கள் ஆகியவற்றில் அரச படையினர் குடிகொண்டிருப்பதும் கடல் தொழில், விவசாயம் ஆகியன செய்வதற்கு அரச படையினர் தொடர்ந்து தடை களை விதித்துக்கொண்டிருப்பதும் அப்பட்டமான போர் நிறுத்த ஒப்பந்த மீறல்களே அண்மையில் இலங்கை உச்ச நீதி மன்றம் இலங்கைப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நிலங்களின் உரிமையாளர்களை மீள் குடிய மர்வு செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டிருந்தது.

ஆட்சி ஆதிக்கக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு 1978ஆம் ஆண்டு அமுலாக்கப்பட்ட அரசியல் அமைப்பிலிருந்து முளைவிட்ட அந்த அரசியல் தத்துவத்தில் வேரூன்றிய ஜனநாயகத்தின் பிரச்சினையே இலங்கைப் பிரச்சினை என்று சுட்டிக்காட்டும் நிலையிலிருந்து ஆசிய மனித உரிமைகள் ஆணையம் பிறளாமலேயே இருக்கின்றது.

அகதிகளுக்கான ஐ.நா. தூதுவராலயத்தின் 2006 ஆண்டின் உலக அகதிகள் நிலை பற்றிய அறிக்கை யில் இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் பல்வேறு விதங்களில் பாதிக்கப்பட்டவர்களின் நெருக்கடி நிலைக்கு இலங்கை அரசுகளின் ஏனோதானே போன்ற நடவடிக்கைகளே அவர்கள் தொடர்ந்து அனுபவிக்கும் துன்பங்களுக்கும் நம்பிக்கையற்ற எதிர்காலத்துக்கும் காரணம் என்று கூறியுள்ளது.

இன்று வரை இலங்கை அரசு போர் நிறுத்த ஒப்பந்தம் அரசியல் அமைப்புக்கு உட்பட்டதல்ல என்பதை நிரூபிக்க அக் கறை காட்டுகிறதே ஒழிய இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எட்டுவதற்கான நடைமுறைச் சாத்திய முள்ள திட்டம் எதையும் முன்மொழியவில்லை.

"தமிழ்ச் சமூகம் எழுப்புகின்ற வாதங்கள் மரபுநெறி வழுவாதவை; தங்கள் வாழ்வை தாங்களே நிர்ணயிக்கும் ஆர்வம், விதியைத் தாமே கட்டுப்படுத்தும் ஆர்வம், தாம் பரம் பரை பரம் பரையாக வாழ்ந்த தம் தாய்மண்ணைத் தாமே ஆள விரும்பும் ஆர்வம் எவருக்கும் இருக்கின்ற நியாயபூர்வமான ஆர்வங்களே..." என்று தெற்காசிய மத்திய ஆசியப் பிராந்தியங்களின் அமெரிக்க உதவிச் செயலர் திரு றிச்சாட் பௌச்சர் 2006 ஆம்ஆண்டு ஜூன் 2 ஆம் திகதி கூறியிருந்தார்.

இன்றைய இலங்கை நிலைமையை அவதானித்த குவீன்ஸ்லாந்து மாநிலத்தில் வாழ்கின்ற அவுஸ்திரேலிய இலங்கைத் தமிழர்களின் சார்பில் அவர்களைப் பிரதிநிதிப்படுத்தும் சங்கங்களின் நிர்வாக்க குழுவின் பொறுப்புள்ள பணியாளர்களாக இருக்கும் நாம் அவுஸ்திரேலிய அரசை பின்வருவன அடங்கிய பாராளுமன்ற மசோதாவை அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுமாறு வேண்டுகிறோம்.

★ இலங்கை அரசின் ஆதரவுடன் இடம்பெறுகின்ற நீதிக்குப் புறப்பான தமிழ்ப் பொதுமக்களின் இனப்படுகொலையைக் கண்டித்தல்.


★ இலங்கைத் தமிழர் தங்கள் வாழ்வை தாங்களே நிர்ணயிக்கும் ஆர்வம், தம் விதியைத் தாமே கட்டுப்படுத்தும் ஆர்வம், தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தம் தாய்மண்ணைத் தாமே ஆளவிரும்பும் ஆர்வம் ஆகிய ஆர்வங்களை ஏற்றலும், தம் தாய் மண்ணை எவருக்கும் விட்டுக்கொடுக்காது தக்க வைக்கும் உரிமையும் சுயநிர்ணய உரிமையும் அவர்களுக்கு உண்டு என்பதை ஏற்றலும்.

★ பெப்ரவரி 2002ஆம் ஆண்டு கைச்சாத்திட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை இரு தரப்பும் முழுமையாக கடைப்பிடிக்க வேண்டிய தேவையையும் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையையும் நிராயுதபாணிகளான அப்பாவிப் பொது மக்கள் மீது அரச ஆரதரவுடன் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள், கொலைகள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தல்.

★ தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கும் அவர்களின் அன்றாட வாழ்வுப்பிரச்சினைக்கும் நோர்வே, அவுஸ்திரேலியா போன்ற சர்வதேச நாடுகளின் ஆதரவுடனும் மேற்பார்வையுடனும் அமைதிப் பேச்சுவார்த்தைகள் மூலம் நீதியான நேர் மையான தீர்வைக்காண இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தல்.

★ இலங்கைத் தமிழரின் துயர்களுக்கு நிரந்தர அமைதி வழித்தீர்வைக்காண அவுஸ்திரேலிய அரசின் ஈடுபாட்டையும் பங்களிப்பையும் காட்டுவதற்கு முன்னோடியாக இலங்கைக்கு உண்மைத்தள நிலையை அறிய நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அனுப்பல் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்



ஒருவன் இறையனுபூதி பெற்ற பிறகு அந்த விவேகம் அவனுக்கு எல்லையற்றவனாக இருக்கும். அந்த இறைவனே உயிர்களாகவும் உலகமாகவும் ஆகியிருக்கிறான் என்ற பாடத்தைப் புகட்டுகிறது. இவ்வாறு இரண்டு வகையிலும் இறைவனை சாதகன் அனுபவிக்கிறான்.

சுவாமி விவேகானந்தர்

## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 15 ஆம் திகதி எழுதுமட்டுவாள் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டது.

பருத்தித்துறை கேணியடியைச் சேர்ந்த சிறி ரவீந்திரராசா தினேஷ்வரன் (வயது–15) என்பவரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்ததாகக் கூறப்படுகின்றது. (து–15)

## மாம்பழம் சந்தியில் முதியவர் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாம்பழம் சந்தி பகுதியில் முதியவர் ஒருவரின் சடலத்தை படையினர் மீட்டுள்ளனர்.

நேற்று மாம்பழம் சந்தி வீதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட படையினரே இச் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலத்தை மீட்ட படையினர் அதனை யாழ்.போதனா வைத்தியசாலையில் பொலிஸார் ஊடாக ஒப்படைத்தனர்.பிரஸ்தாப சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந–15,133,132)

## வீரச்சாவு

மன்னார் முள்ளிக்குளத்திற்கும் வலையன் காட்டிற்கும் இடையில் நேற்று இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர்த் தாக்குதலில் ஒருவர் வீரச்சாவடைந்ததுடன் ஒருவர் விழுப்புண் அடைந்துள்ளதாக விடுதலைப் புலிகளின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளனர். (ந–5)

# வத்தளையில் இருவர் கைது

(வத்தளை)

வத்தளை ஜாயெல பவுணுகம கடற்கரைப் பகுதியில் வைத்து நேற்றுக் காலை 5.30 மணியளவில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

படகு ஒன்றில் பவுணுகம கரையோரத்தில் வந்திறங்கிய இருவர் குறித்து பிரதேச மக்கள் தகவல் கொடுத்ததையடுத்து அங்கு விரைந்து வந்த பொலிஸாரும் கடற்படையினரும் அவர்களை விசாரணை செய்ய முற்பட்டவேளை அவர்கள் இருவரும் சயனைட் அருந்தி உள்ளனர்.

சயனைட் அருந்திய இருவரும் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் இருவரும் ராகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தின்போது படகில் வந்த மேலும் சிலர் தாம் வந்த படகை வெடிக்க வைத்து விட்டு கடலில் பாய்ந்து தப்பிச் சென்றுள்ளதாக படையினர் தெரிவித்துள்ளனர். (ந–5)

## உயிரிழந்தோர் எண்ணிக்கை 66 ஆக உயர்வு

(கொழும்பு)

ஹெப்பிட்டிக்கொல்லாவ குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 66 ஆக உயர்வடைந்துள்ளது.

கொழும்புத் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் நேற்று முன்தினமும், அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த மற்றொருவர் நேற்று அதிகாலையிலும் உயிரிழந்தனர்.

இவர்கள் இருவர்களினதும் உயிரிழப்பையடுத்து இறந்தவர்களின் எண்ணிக்கை 66 ஆக உயர்வடைந்துள்ளது. (ந–9)

# கிளைமோர்த் தாக்குதல் யாழ். ஆயர் கண்டனம்

கடந்த 15 ஆம் திகதி ஹெப்பிட்டிக்கொல்லாவவில் நடைபெற்ற கோரச் சம்பவத்தால் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம். இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்திரநாயகம் தெரிவித்துள்ளார்.

ஹெப்பிட்டிக்கொல்லாவ நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் கிளைமோர்த் தாக்குதலில் சிக்கியுள்ளது.

சிறுவர்கள் உட்பட 63 பேர் கொல்லப்பட்டும் 70இற்கு மேற்பட்டோர் படுகாயப்பட்டுமுள்ளனர்.

இத் தாக்குதலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். காயப்பட்டவர்களோடும் வேதனைகளை அனுபவிப்பவர்களோடும் எமது அனுதாபங்களை தெரிவித்து இணைந்து கொள்கின்றோம் என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## அதிசக்தி வாய்ந்த இரு குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

வென்னப்புவ கடற்கரைப் பிரதேசத்தில் நேற்றுக் காலை அதிசக்தி வாய்ந்த இரு குண்டுகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இக் குண்டுகளின் எடை சுமார் 70 கிலோக்கிராம் என வென்னப்புவ பொலிஸ் இன்பெக்டர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தெரிவித்த தகவலையடுத்தே இக் குண்டுகளை மீட்டதாகவும் பைவர் கவசத்தில் வைக்கப்பட்டிருந்த இக் குண்டுகள் தரையிலும் கடலிலும் வெடிக்க வைக்கக் கூடியவையெனவும் இவ்வாறான அதி சக்தி வாய்ந்த குண்டுகள் இலங்கையில் முதன்முதலாக இப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் வென்னப்புவ தலைமைப் பொலிஸ் பரிசோதகர் ஜே.பி. சோமரட்ண தெரிவித்துள்ளார். (ந)

## துக்கதினம் அனுஷ்டிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. ஹெப்பிட்டிக்கொல்லாவப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இத் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. திருகோணமலை மற்றும் கந்தளாய் சூழவுள்ள பகுதிகளிலேயே துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. (ந–9)

## ஒருவர் உயிரிழப்பு...

உயிரிழந்துள்ளார்.

மேலும் இருவர் காணாமல் போயுள்ளதாகவும் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி. தசநாயக்க தெரிவித்துள்ளார்.

தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் இப் படகில் ஆறு கடற்படையினர் இருந்ததாகவும் அதில் மூன்று கடற்படையினர் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் கடற்படைப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ந–5)

## வரணியில் துப்பாக்கிச்சூடு

(யாழ்ப்பாணம்)

வரணி அம்மன் கோவில் பகுதியில் வீதிக் காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர்மீது இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் இச் சூட்டை நடத்தியதாக் கூறப்படுகின்றது. (து–15)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசேந்திரம் அமுதவல்லி

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேந்திரம் அமுதவல்லி 17.06.2006 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் இராசேந்திரத்தின் அன்பு மனைவியும் மகேந்திரனின் அன்புத் தாயாரும் சூரியகுமாரியின் அன்பு மாமியாரும் திலக்ஷன், நிஷாந்தன், லக்கி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.06.2006 இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கருங்காலி,*
*காரைநகர்.*

தகவல்,
மகன்.

## பேசாலைக் கடற்...

களின் படகுகளை கடற்படை யின் நான்கு படகுகள் வழிமறித்து தாக்குதலை நடத்தியது.

இதனையடுத்து கடற்புலிகள் திருப்பித் தாக்கினர். இதில் கடற்படையின் மூன்று படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு படகு சேத மடைந்தது. இத்தாக்குதலில் 12 கடற்படை யினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந் தனர்.

புலிகள் தரப்பில் இருவர் காயங்களுக் குள்ளாகினர். இத் தாக்குதலின்போது விடுதலைப்புலிகளால் கடற்படையின் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல் சம்பவம் குறித்து இரா ணுவப்பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவிக்கை யில், கடற்படைக்கும் விடு தலைப்புலிகளுக்குமிடையே பேசாலை கடற்பரப்பில் நடந்த மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் 25 தொடக்கம் 30 வரையான கடற்புலிகள் இறந்திருக்கலாம் எனவும்,

இத் தாக்குதலில் ஆறு கடற்படையினர் உயிரிழந்துள்ளதாகவும் எட்டுப்படையினர் காணாமல் போயுள்ளதாகவும் கூறியதுடன் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளின் 12 படகுகளில் 8 படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாக்வும் தெரிவித்துள்ளார். (ந–5)

## வான் தாக்குதல்...

தலுக்கும் எமக்கும் தொடர்பில் லை என்று மீண்டும் கூறுகின்றோம்.

விடுதலைப்புலிகளை சர்வதேச சமூகத்திடம் இருந்து தனிமைப் படுத்தும் சக்திகள் குறித்து நாம் அவதானமாகவுள்ளோம். அமைதி முயற்சிகளை எதிர்க்கும் இந்த சக்திகளே பொதுமக்கள்மீதான தாக்குதலை நடத்தி நிலைமைகளை மேலும் கொழுந்து விட்டெரியச் செய்து முழுஅளவிலான யுத்தத்தை தூண்டியுள்ளன.

ஒஸ்லோவில் இலங்கை அரசாங்கம் பொறுப்புடன் நடந்து கொள்ளாமை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தடைக்குப்பின்னைய சூழ்நிலையால் இரு தரப்புச் சமநிலை பாதிக்கப்பட்டுள்ளதால் அது இலங்கையில் ஒரு யுத்தத்தை எதிர்நோக்கச்செய்துள்ளது.

விமானக்குண்டு வீச்சுக்கள் மூலம் பொது மக்கள் குடியிருப்பை தாக்கியமைக்கு அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும். அரச படைகளின் வான் தாக்குதல்கள் தொடர்ந்தால் விடுதலைப்புலிகள் பதில்தாக்குதலை நடத்த நேரிடும் என்ற கடும் எச்சரிக்கையை அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளோம் என்றும் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார். (ந–5)

## பேசாலை...

சென்று திரும்பிய நான்கு மீனவர்களும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து மீனவர்களின் படகுகளையும் அவர்கள் எரியூட்டியுள்ளனர்.

மன்னார் வங்காலையிலும் மீனவர்களின் குடிசைகள் எரியூட்டப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றனர். மேற் படி பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ந–5)











வாழ்த்துகின்றோம்

16.06.2006 ஆம் திகதி அன்று இல்லற வாழ்வில் இணைந்த திருச்சிற்றம்பலம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திருநிறைச் செல்வன் சிவரூபன் மதுசூதனன் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி திருநிறைச் செல்வி மதியரசி தம்பதிகள் எல்லா நலனும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வலம்புரி நண்பர்கள்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18 .06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.